பக்கங்கள்: 14

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 15 வியாழக்கிழமை 29.05.2025 கதிர் 201

### இது ரகசியம் அல்ல!

என்ன இருந்தாலும் வாயுள்ள பிள்ளை பிழைக்கும் என்பது சரியாகத்தான் இருக்கின்றது. ஏனெனில் இன்று 'தும்புத்தடி' புகழ் கஜேந்திரகுமாரைச் ☞ 2

# வர்த்தமானி நீக்க அறிவிப்பு இன்றேல் முழு வீச்சில் சட்டமறுப்புப் போராட்டம்

## தமிழ் அரசுக் கட்சி செயலர் சுமந்திரன் தெரிவிப்பு

காணி தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை இரத்துச்செய்வதாக ஆளும்தரப்பும் அறிவித்திருப்பதன் காரணமாக நாளைய தினம் (30) வட, கிழக்கில் முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த பாரிய சட்டமறுப்புப் போராட்டம் மற்றும் அரச பணியிட முடக்கப் போராட்டம் என்பவற்றை ஒத்திவைத்திருப்பதாகவும், இரத்துச்செய்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெகுவிரைவில் வெளியிடப்படாவிடின், அப்போராட்டம் முழுவீச்சில் முன்னெடுக்கப்படும் எனவும் இலங்கைத் தமிழ அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் எச்சரித்துள்ளார்.

வடமாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை 3 மாதகாலத்துக்குள் எவரும் உரிமைகோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என ஆளும்தரப்பினால் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் மார்ச் 28 வர்த்தமானி வெளியிடப்பட்டது.

அந்த அறிவித்தலை ஆளும்தரப்பும் முழுமையாக திரும்பப்பெறவேண்டும் என வலியுறுத்தி தமிழ் அரசியல் தரப்பிலிருந்து கடும் எதிர்ப்பு உருவானது. வர்த்தமானியை திரும்பப் பெறாவிட்டால் வடக்கில் அரச செயற்பாட்டு ☞ 2

# பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரத்தை பறிக்க ஆளும்தரப்பு திட்டம்

## பிரதான எதிர்க்கட்சி கடும் விசனம்

மின் கட்டணம் தொடர்பான இறுதி தீர்மானத்தைஎடுப்பதற்குபொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுள்ள அதிகாரத்தை நிதி அமைச்சின் வசமாக்குவதற்கு ஆளும்தரப்பும் நடவடிக்கை எடுத்துள்ளது. இது நாட்டின் மின் பாவனையாளர்கள் பெற்றுக் கொண்ட உரிமையை மீளப் பெறும் செயற்பாடாகும். அதனை ஒருபோதும் அங்கீகரிக்கப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:ராஜபக்ச ஆட்சியில் ஊழலுக்கு பெயர் போன பீ.ஆர். என்ற நபரைப் போன்று தற்போதைய ஆட்சியிலும் ஒரு பீ.ஆர். இருக்கின்றார். சுமார் 300க்கும் அதிகமான கொள்கலன்களை அவர் எவ்வித பரிசோதனைகளும் இன்றி விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றார். நிச்சயம் பரிசோதிக்கப்பட வேண்டியவை என சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தும் அவை பரிசோதிக்கப்படவில்லை.

இது ஊழல், மோசடிக்கு ஆளும்தரப்பும் துணைபோகும் ஒரு செயற்பாடாகும். இது தொடர்பில்விடயத்துக்குபொறுப்பானஅமைச்சர் பிமல் ரத்நாயக்க தெளிவுபடுத்துவதோடு, ☞ 8

# ஐ.தே.க. உள்ளாட்சி உறுப்பினர்கள் சிறீகொத்தாவில் இன்று பதவியேற்பு

உள்ளூராட்சிமன்றத்தேர்தலில்ஐக்கிய தேசிய கட்சியில்போட்டியிட்டு தெரிவாகிய மற்றும்பட்டியல்மூலம்தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்வு கட்சித்தலைமையகமானசிறிகொத்தவில் இன்று காலை 9 மணிக்கு கட்சியின் தலைவரும் முன்னாள்ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க தலைமையில் இடம்பெறவுள்ளது.

மே 6 நடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி நாடுபூராகவும் யானை சின்னத்தில் போட்டியிட்டது. ஐக்கிய மக்கள் சக்தி அமைக்கப்பட்ட பின்னர், ஐக்கிய ☞ 8

# இன, மத வேறுபாடுகளைக் களைய புதிய சட்டத் திருத்தங்கள் விரைவில்

## ஐரோப்பிய ஒன்றியத்திடம் அமைச்சர் ஹேரத் தெரிவிப்பு

எந்தவொரு இன, மதப் பிரிவினரும் வெவ்வேறு விதமாக நடத்தப்படாமல் இருப்பதை உறுதிசெய்யக்கூடியவகையில் சட்டத்திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்திருப்பதாக அயலுறவுத்துறைஅமைச்சர்விஜித்தஹேரத்திடம் ஐரோப்பிய ஒன்றியத்துக்குத் தலைமை வகிக்கும் போலந்து குடியரசின் அயலுறவுத்துறைஅமைச்சர் ரெடொஸ்லாவ் சிகோர்ஸ்கி உறுதியளித்துள்ளார்.

போலந்து குடியரசின் அயலுறவுத்துறை அமைச்சர் ரெடொஸ்லாவ் சிகோர்ஸ்கி தலைமையிலானஐரோப்பியஒன்றியப்பிரதிநிதிகள் குழுவினர் உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு நேற்று இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அயலுறவுத்துறை மற்றும் பாதுகாப்பு கொள்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் பிரதிநிதியும், ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழுவின் துணைத் தலைவருமான காஜா கலாஸைப் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கைக்கு வருகை தந்திருக்கும் அமைச்சர் ரெடொஸ்லாவ் சிகோர்ஸ்கி தலைமையிலான குழுவினருக்கும் அயலுறவுத்துறை அமைச்சர் ☞ 8

# போதைப் பொருள் குற்றங்களுக்கு எதிர்காலத்தில் கடும் சட்டநவடிக்கை

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

போதைப்பொருள் வர்த்தகம் உள்ளிட்ட எந்தவொரு சட்டவிரோத செயற்பாடுகளையும் நாட்டுக்குள் அனுமதிக்க முடியாது. அதற்கு ஆளும்தரப்பும் ஒருபோதும் இடமளிக்கப்போவதுமில்லை. எதிர்காலத்தில் இவ்வாறான குற்றச் செயல்களுடன் தொடர்புடைய தரப்பினருக்கு பாரபட்சமின்றி கடுமையான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ☞ 2

# பிரபாகரன் அமைதிக்காகவா போராடினார்? அநுரவின் கூற்றுடன் உடன்படவே முடியாது

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவிப்பு

நாட்டில் அனைவரும் அமைதிக்காகவே போரில் ஈடுபட்டனர் என்று தேசிய போர் வீரர் தினத்தன்று ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்த கருத்துடன் என்னால் உடன்பட முடியாது. பிரபாகரன் அமைதிக்காகவா போராடினார்? வடக்கு, கிழக்கில் முகாம்கள் அகற்றப்படுகின்றன என்றால் அதன் ஊடாக எதிர்மறையான பிரதிபலன்களே கிடைக்கும் என முன்னாள் நாடாமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய ☞ 2

# துப்பாக்கிச் சூடுகளைக் கட்டுப்படுத்த பொலிஸ் மோ. சைக்கிள் தனி பிரிவு



தெற்கு மாகாணத்தில், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம் மற்றும் துப்பாக்கி வன்முறைக்கு விரைவாக பதிலளிக்கும் வகையில், மூத்த துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் (SDIG) கித்சிரி ஜெயலத் தலைமையில் ஒரு சிறப்பு மோட்டார் சைக்கிள் பிரிவு ☞ 2

### வழங்கிய வாக்குறுதிகளை மறந்து

# முன்னைய ஆட்சியாளர் போன்றே செயற்படுகின்றது என்.பி.பி. தரப்பும்

## ஆஸி. தூதரிடம் கஜேந்திரகுமார் கடும் அதிருப்தி

என்.பி.பி. ஆளும்தரப்பு பயங்கரவாதத்தடைச்சட்ட நீக்கம், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. ஆனால் தற்போது இப்புதிய ஆளும்தரப்பும் வாக்குறுதிகளை மறந்து, ☞ 2

# உக்ரைன் போரில் சிக்கியுள்ள இலங்கை படையினரை மீட்டுத் தரக்கேட்டு அவர்களின் குடும்பத்தினர் போராட்டம்

உக்ரைன் ரஷ்யா போரில் சிக்கிக் கொண்டுள்ள தமது உறவுகளை இலங்கைக்கு அழைத்துவர வலியுறுத்தி நேற்று கொழும்பு கோட்டை தொடருந்து நிலையம் முன்பாக போராட்டம் இடம்பெற்றது.

உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கிடையில் போர் ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில், அதன் பின்னணி தொடர்பில் அறியாது குடும்பத்தினரின் நலன் கருதி தொழில் நிமித்தம் ரஷ்யாவுக்கு சென்ற முன்னாள் படையினர் பலர், கூலிப் படையினராக இந்தப் போருக்குள் சிக்கியுள்ளனர். அவர்களில் பலர் உயிரிழந்துமுள்ளனர்.ஒரு ☞ 8

## இனி இது .....

சந்திக்கிறார்கள் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானமும் பொதுச் செயலாளர் சுமந்திரனும்.

இந்தச் சந்திப்புக்கு முதற்காரணம் உள்ளாட்சி சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் கலந்துரையாடுவது. வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியக் கட்சிகள் முன்னிலை பெற்றுள்ள சபைகளில் அவை ஆட்சியமைப்பதற்கு தமிழ் காங்கிரஸ் ஆதரவளிப்பது என்கிற முடிவை தமிழ் தேசிய பேரவை எடுத்திருப்பதாக அண்மையில் 'தும்புத்தடி' கஜேந்திரகுமார் அறிவித்திருந்தார்.

அப்படி தமிழ் காங்கிரஸ் ஆதரவளித்தால் பல சபைகளில் தமிழ் அரசுக் கட்சியும் அந்தக் கட்சியும் சேர்ந்தால் மட்டுமே போதும் ஆட்சியைப் பிடிக்க. இதை மறுவளமாகச் சொன்னால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஆதரவு இன்றியே இந்த இரு கட்சிகளாலும் பல சபைகளிலும் ஆட்சியை அமைக்க முடியும். தமிழ் அரசுக் கட்சியுடனான பேச்சில் தமக்கு அதிக ஆசனங்கள் இல்லாத கோப்பாய், மானிப்பாய், சாகவச்சேரி போன்ற சபைகளைத் தரும்படி ஜனநாயகக் கூட்டணியினர் கேட்டிருந்தார்கள். இதுவொரு இடறலாக இந்த விவகாரத்தில் தொக்கி நின்ற நிலையில் தமிழ் காங்கிரஸின் ஆதரவு கிடைத்தால் தமிழ் அரசுக்கு ஜனநாயகக் கூட்டணியினதோ வேறு சிறு கட்சிகளினதோ தயவை எதிர்பார்த்து நிற்கும் நிலை குறைந்துவிடும்.

அதனால்தான் தமிழ் அரசுக் கட்சி புத்திசாலித்தனமாக தமிழ்க் காங்கிரஸுடன் நேரில் பேசுவதற்குத் தயாராகிவிட்டது. இந்தப் பேச்சிலும் யாழ். மாநகர சபை போன்ற சில முக்கிய சபைகளைத் தமக்குத் தந்தால்தான் ஆதரவு என்று காங்கிரஸ் நிபந்தனை விதிக்குமாயின் பிரச்சினைதான். ஏனெனில் தமக்கு அதிக ஆசனங்கள் உள்ள சபைகளில் ஆட்சியமைக்கும் உரிமையைத் தாமே கோருவது என்பதில் தமிழ் அரசுக் கட்சி திடமாக இருக்கிறது. அப்படிக் கோரும்போது தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் ஆதரவளித்தால் தாம் ஆட்சியமைக்கலாம், அல்லது தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளின் சாயம் வெளுப்பதன் மூலம் தாம் தோற்றாலும் எதிர்காலத் தமது அரசியலுக்கு அது இலாபகரமாக அமையும் என்பதுதான் தமிழ் அரசின் கணக்கு. எனவே தமிழ் அரசு முன்னிலை பெற்றுள்ள சபைகளில் எதையாவது தமக்குத் தருமாறு காங்கிரஸும் நிபந்தனை விதித்தால் இந்தப் பேச்சுக்களால் எந்தப் பயனும் இருக்காது.

இந்தச் சந்திப்பின் நேரடியான முதன்மை நோக்கம் இதுவாக இருந்தாலும் மற்றொரு விடயமும் இதற்குள் உண்டு. தமிழ்க் கட்சிகளை ஒற்றுமைப்படுத்தத் தான் முயற்சி எடுத்தார் என்றும் தமிழ் அரசுக் கட்சி அதனை முறித்துவிட்டது என்றும் கஜேந்திரகுமார் அடிக்கடி அழுது வருகின்றார். போகும் இடங்களில் எல்லாமும் பார்ப்பவர்கள் எல்லோரிடமும் அவர் இப்படி அழுதுவருவதன் காரணமாக மக்கள் அவரில் பரிதாபம் கொண்டுவிடுவார்களோ என்கிற ஒரு சிறு அச்சம் தமிழ் அரசுக் கட்சித் தலைவருக்கு உண்டு. எனவே இந்தச் சந்திப்பின் மூலம் கஜேந்திரகுமாரின் அழுகைக்கு ஒரு மறுத்தான் வைக்க முடியும் என்பது அவரது கணிப்பாகவும் இருக்கக்கூடும்.

அதனால்தான் வாயுள்ள பிள்ளை பிழைக்கும் என்றும் தொடக்கத்திலேயே சொன்னேன். 'தும்புத்தடி' கஜேந்திரகுமார் பேசிய விடயங்கள் மூலமே இந்தச் சந்திப்புக்கு அடிகோலப்பட்டுள்ளது.

இந்த மூவருக்கும் இடையிலான சந்திப்பு இன்று யாழ்ப்பாணத்தில்தான் நடக்கிறது. கஜேந்திரகுமாரை தொலைபேசியில் அழைத்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம், தானும் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரனும் கஜேந்திரகுமாரைச் சந்திக்க விரும்புகின்றனர் என்று கூறியுள்ளார்.

வெள்ளிக்கிழமை (30) மாலை 6.00 மணிக்குசந்திக்கமுடியும் என்றுகஜேந்திரகுமார் பதிலளித்துள்ளார். சிவஞானமும் அதற்கு இணக்கம் தெரிவித்தார்.

சந்திப்பை உறுதிப்படுத்திய கஜேந்திரகுமார் இச்சந்திப்புக்கு ஏன் அழைப்புவிடுக்கப்பட்டது என்று தனக்குத் தெரியாது என்று தெரிவித்துள்ளார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வர்த்தமானி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடக்கப்போராட்டம், சட்டமறுப்புப்போராட்டம் என்பன இடம்பெறும், அரசுத் தலைவர் அநுரகுமார வடக்கிற்கு வரமுடியாத வகையில் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று தமிழ் அரசுக் கட்சி அறிவித்திருந்தது. அதுமட்டுமன்றி, இந்த வர்த்தமானி அறிவித்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இலவச சட்ட உதவியை வழங்கவும் சட்டத்தரணிகள் குழு முன்வந்திருந்தது. இந்த நிலையில், அவ்வர்த்தமானி அறிவித்தலை இரத்துச்செய்வதற்கு அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இது குறித்து தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் தெரிவித்ததாவது:

மே 28க்கு முன்பதாக அவ்வர்த்தமானி அறிவித்தலை நீக்குமாறு நாம் ஆளும்தரப்புக்கு கால அவகாசம் வழங்கியதாகவும், அன்றேல் 29 ஆம் திகதி வட, கிழக்கு மாகாணங்களில் பெரும் சட்டமறுப்புப்போராட்டம் அரச பணியிட முடக்கப் போராட்டம் என்பன முன்னெடுக்கப்படும் என எச்சரித்திருந்தோம்.

அதன்படி சிவில் சமூக அமைப்புக்களுடன் கலந்துரையாடி நாளை வெள்ளிக்கிழமை (30) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களிலும் பெரும் சட்ட மறுப்புப் போராட்டத்தையும், கடையடைப்பையும் முன்னெடுப்பதற்கும் திட்டமிட்டிருந்தோம்.

தற்போது ஆளும்தரப்பும் அவ்வர்த்தமானி அறிவித்தலை நீக்குவதற்கு தீர்மானித்திருப்பதன் காரணமாக நாம் ஒழுங்கமைத்திருந்த போராட்டத்தைப் பிற்போட்டிருக்கின்றோம். எனினும் அரசு வெளியிட்ட 2430 வர்த்தமானியை நீக்குவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெகுவிரைவில் வெளியிடப்படாவிடின், அப்போராட்டத்தை முழுவீச்சில் நடத்துவோம்.

மேலும் தற்போது வட, கிழக்கு மாகாணங்களில் காணி உறுதிப்பத்திரம் இல்லாதோருக்கு வழங்கப்பட்டுவரும் இலவச சட்ட ஆலோசனைகள் மற்றும் உதவிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் - என்றார்.

## துப்பாக்கிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கப்பட்டுள்ளது.

குற்றங்களிலிருந்து தப்பி ஓடும் சந்தேகநபர்களை, குறிப்பாக துப்பாக்கி சம்பந்தப்பட்ட சம்பவங்களில், விரைவான நடவடிக்கை மிக முக்கியமானதாகக் கண்டறிந்து கைது செய்வதை இந்தப் பிரிவு நோக்கமாகக்கொண்டுள்ளது. புதிய பிரிவில் 23 மோட்டார் சைக்கிள்கள் உள்ளன. தங்காலை மற்றும் மாத்தறை பிரிவுகளைச் சேர்ந்த 8 போர் பைக்குகள் மற்றும் 15 நெடுஞ்சாலை ரோந்து பைக்குகள் - மற்றும் கிட்டத்தட்ட 46 பேர் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

அதிகாரிகளுக்கான அதிகாரப்பூர்வ விளக்கவுரை மே 26, 2025 அன்று மாத்தறை மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

## முன்னைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னைய ஆளும்தரப்புக்களைப்போன்றே செயற்பட்டுவருகின்றது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்றஉறுப்பினருமானகஜேந்திரகுமார் கடும்அதிருப்தி தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலிய உயர்ஆணையர் போல்ஸ்டீபன்ஸ் உடனான சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். இந்தச் சந்திப்பு செவ்வாய்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள ஜெட்விங் ஹோட்டலில் நடைபெற்றது.

ஆஸ்திரேலிய உயர்ஆணையரின் அழைப்பின்பேரில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது, வடக்கில் உள்ள காணிகள் தொடர்பில் அண்மையில் ஆளும்தரப்பினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல், தொடர்ச்சியான அழுத்தங்களை அடுத்து அதனை நீக்க மேற்கொள்ளப்பட்டிருக்கும் தீர்மானம், வட, கிழக்கில் இடம்பெற்றுவரும் நில ஆக்கிரமிப்புக்கள் என்பன பற்றி கஜேந்திரகுமார் விரிவாக விளக்கமளித்தார்.

அதனையடுத்து, தமிழ்த்தேசிய கட்சிகள் புரிந்துணர்வுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான வாய்ப்பு உண்டா என ஆஸ்திரேலிய உயர்ஆணையர் எழுப்பிய கேள்விக்குப்பதிலளித்தகஜேந்திரகுமார், தமிழ்த் தேசியகட்சிகளைஒற்றுமைப்படுத்தும்நோக்கில் ஆரம்பத்தில் தம்மால் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் தொடர்பில் எடுத்துரைத்தார். அம்முயற்சிகளுக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் சாதகமான சமிக்ஞையை வெளிக்காட்டியிருந்ததாகவும், இருப்பினும் புதிய பதில் பொதுச்செயலாளரின் தெரிவின் பின்னர் அக்கட்சி ஒற்றுமை முயற்சிகளிலிருந்து பின்வாங்கியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று "புதிய ஆளும்தரப்பு தொடர்பில் உங்களது கணிப்பு என்னவாக இருக்கிறது?" என்ற ஆஸ்திரேலிய உயர்ஆணையரின் கேள்விக்குப் பதிலளித்த கஜேந்திரகுமார், பயங்கரவாதத்தடைச்சட்ட நீக்கம், நிறைவேற்றதிகாரஜனாதிபதிமுறைமை ஒழிப்பு, அரசியல்கைதிகளின்விடுதலை, காணி விடுவிப்பு என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்ததாகவும், ஆனால் தற்போது இப்புதிய ஆளும்தரப்பும் வாக்குறுதிகளை மறந்து, முன்னைய ஆளும்தரப்புக்களைப்போன்றே செயற்பட்டுவருவதாகவும் கடும் அதிருப்தி வெளியிட்டார்.

மேலும் அரசியல் தீர்வு மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் ஆஸ்திரேலிய உயர்ஆணையர் விளக்கம் கோரியிருந்த நிலையில், தாம் சமஷ்டி அடைப்படையிலான அதிகாரப்பகிர்வுடன்கூடிய அரசியல்தீர்வையே கோருவதாகவும், அதேவேளை சர்வதேச நீதிப்பொறிமுறை ஊடாக பொறுப்புக்கூறல் உறுதிசெய்யப்படவேண்டும் எனவும் கஜேந்திரகுமார் வலியுறுத்தினார்.

## போதைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

தெற்கு ஆழ்கடல் பகுதியில் வைத்து இரண்டு மீன்பிடி படகுகளில் மீட்கப்பட்ட 600 கிலோவுக்கும் அதிக ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருள் இலங்கை கடற்படையினரால் நேற்று டிகோவிட்ட துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டன. இதனைப் பார்வையிடுவதற்காக பாதுகாப்பு பிரதி அமைச்சர் அங்கு சென்றிருந்தார். அங்கு செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை கடற்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடிப்படையாக்கொண்டு அரச புலனாய்வு பிரிவினர் முப்படையினர் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகம் மற்றும் பிராந்தியத்தின் ஒருங்கிணைப்பு மையம் என அனைத்து தரப்பினரும் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தனர்.

நாட்டில் போதைப்பொருள் பாவனை கட்டுப்படுத்தும் நோக்கில் பிராந்தியங்களுக்கு பொறுப்பான ஒருங்கிணைந்த மையத்தின் உதவியுடன் கடந்த காலங்களில் இலங்கை கடற்படையினர் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கமைய போதைப்பொருள்வர்த்தகத்தைமேற்கொள்ளும் தரப்பினர் அதற்கு உதவி ஒத்தாசை வழங்கும் தரப்பினர் மற்றும் சட்ட விரோதமான முறையில் கடல் மார்க்கமாக படகுகளில் போதைப்பொருட்களை நாட்டிற்குள் கொண்டு வருபவர்கள் என பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இந்த நாட்டு மக்களுக்கு கௌரவமான வாழ்க்கையைப் பெற்றுக்கொடுப்பதே எமது ஆளும்தரப்பின் கொள்கையாகும். அதில் போதைப்பொருளை முற்றாக ஒழித்து எதிர்கால சந்ததியினருக்கு வளமான நாட்டையும் அழகான எதிர்காலமொன்றையும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே எமது ஆளும்தரப்பும் முழுமூச்சாக செயற்படுகிறது.

தற்போதைய ஆளும்தரப்பும் ஆட்சிக்கு வந்ததில் இருந்து இதுவரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் ஊடாக 750 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள் 1650 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஹஷீஷ் போதை பொருள் உள்ளிட்ட பாரியளவிலான விஷ போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் இந்த சுற்றிவளைப்புகள் கடற்பகுதிகள் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் அதிகம் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே உரிய முறையில் தமது மீன்பிடி தொழிலை மேற்கொள்ளுமாறு கடற்றொழிலாளர்களிடம் வினயமாக கேட்டுக் கொள்கிறோம்.

இந்த நாட்டிலிருந்து போதைப்பொருளை ஒழிக்கும் பொறுப்பு எமக்கும் உங்களுக்கும் உள்ளது. கடற்றொழிலாளர்கள் எமது நாட்டின் தேசிய உற்பத்திக்கு பாரியளவில் பங்காற்றுகிறார்கள். ஆனால் ஒரு சிலர் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பில் எமக்கு பல தகவல்கள் கிடைத்துள்ளன. நாம் அது தொடர்பில கவனம் செலுத்தியுள்ளோம்.

போதைப்பொருள் வர்த்தகம் உள்ளிட்ட எந்தவொரு சட்டவிரோத செயற்பாடுகளை நாட்டிற்குள் அனுமதிக்க முடியாது. அதற்கு ஆளும்தரப்பும் ஒருபோதும் இடமளிக்க போவதுமிலல்லை. இவ்வாறான குற்றச் செயல்களுடன் தொடர்புடைய தரப்பினருக்கு பாரபட்சமின்றி கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

## பிரபாகரன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர்நிறைவடைந்தமை தொடர்பில் எமக்கு பெரு மகிழ்ச்சியிருக்கிறது. அவ்வாறில்லை எனில் இன்று இந்த நாடு இந்தளவிற்கும் எஞ்சியிருக்காது. நிச்சயம் பிளவுஏற்பட்டிருக்கும். எவ்வாறிருப்பினும் போர் நிறைவடைந்த பின்னரும் நாட்டின் முன்னேற்றப் பயணம் மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக இல்லை.

போர்நிறைவடைந்தபின்னர் நாட்டை ஆட்சி செய்த அனைத்து ஆட்சியாளர்களும் அதற்குப் பொறுப்பு கூற வேண்டும். வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ள சில இலங்கை தமிழர்கள் தமது வீசாவைப் பாதுகாத்துக்கொள்வதற்காக, தமது வர்த்தகங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இலங்கையில் மீண்டும் போர் ஏற்படும் சாத்தியக் கூறுகள் இருப்பதாகக் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

இந்த காரணியை அடிப்படையாகக் கொண்டு தம்மால் மீண்டும் இலங்கைக்கு செல்ல முடியாது என்பதை அவர்கள் அந்த நாடுகளிடம் கூறுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளால் நாட்டுக்குஓரளவு அச்சுறுத்தல் காணப்படுகிறது. அந்த அச்சுறுத்திலிருந்து முற்றாக மீளவேண்டும், ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் யாரோ ஒருவருக்கு முன்னாள் மண்டியிடுவதை விடுத்து பலம் மிக்க நாடாக மாற்றமடைய வேண்டும்.

தேசிய பாதுகாப்பு தொடர்பில் கரிசனை கொள்ளாமல் உறங்கிக் கொண்டிருந்தால் மீண்டுமொரு பயங்கரவாத அச்சுறுத்தல் ஏற்படலாம். இலங்கையின் தேசிய பாதுகாப்பு என்பது சர்வதேச நாணய நிதியத்தின் பொறுப்பல்ல. எனவே பாதுகாப்பு படைகளின் ஆளணியைக் குறைப்பதாகக் கூறுவதை என்னால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. பாதுகாப்பு படைகளை கலைத்து அதன் மூலம் மீதப்படுத்தப்படும் 80 பில்லியனைக் கொண்டு நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

தேசிய பாதுகாப்பு என்பதை நான் பார்க்கும் கோணத்தில் இந்த நாட்டில் காணவில்லை. பொது மக்கள் பாதுகாப்பும்கூட அச்சுறுத்தல் மிக்கதாகவே காணப்படுகிறது. பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நிறுவனங்களின் ஏதேனுமொரு பலவீனத்தின் காரணமாகவே நாட்டில் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளன. எனவே தான் அனுபவமும் அறிவும் மிக்கவர் அந்த பொறுப்பினை ஏற்க வேண்டும் என்று நாம் ஆரம்பத்திலிருந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம்.

வடக்கு மற்றும் கிழக்கில் முகாம்கள் அகற்றப்படுகின்றன என்றால் அதன் ஊடாக எதிர்மறையான பிரதிபலன்களே கிடைக்கும். வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் நினைவேந்தல்களை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. தொடர்ச்சியாக அதற்கு இடமளித்தால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய கிருமிகள் உருவாகுவதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுப்பதைப் போன்றாகிவிடும்.

தேசிய போர்வீரர் தினத்தில் உரையாற்றிய போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அமைதிக்காகவே அனைவரும் போராடினர் என்று கூறியதை ஏற்றுக் கொள்ள முடியாது. அமைதிக்காக தலதா மாளிகையின் மீதோ, ஸ்ரீ மகா போதியின் மீதோ தாக்குதல்களை மேற்கொள்ள முடியாது. பிரபாகரன் அமைதிக்காக போராடினார் என்று கூறினால் அதனை யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஜனாதிபதி அவரது நிலைப்பாட்டைக் கூறியதால் நான் கேட்டுக் கொண்டிருந்தேன். அந்த இடத்தில் ஓடிச் சென்று நீ கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என கூச்சலிடுவதற்கு நான் முட்டாள் இல்லையல்லவா? என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திக் குழு கூட்டம்





மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டம், மன்னார்மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனின் நெறிப்படுத்தலின் கீழ், பிரதியமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான உபாலி சமரசிங்கவின் தலைமையில், நேற்று (புதன்கிழமை) மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், முத்து முஹம்மட், காதர் மஸ்தான், ரவிகரன், ஜெகதீஸ்வரன் ஆகியோர் உட்பட பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், முப்படை அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள், சிவில் சமூக அமைப்புக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, மாவட்ட மட்டத்தில் கலந்துரையாடப்பட வேண்டிய பல்வேறு விடயங்கள் மற்றும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இங்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத், மன்னர் காற்றாலை மின் உற்பத்தி திட்டம், மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில், அனுமதியின்றி முன்னெடுக்கப்படுவதாகவும், மக்கள் பிரதிநிதிகளினாலோ, மாவட்ட அபிவிருத்திக் குழுவினாலோ எந்தவொரு அனுமதியும் அத்திட்டத்திற்கு வழங்கப்படவில்லை என்றும் சபையில் சுட்டிக்காட்டினார்.

ஆனால், முறையான அனுமதியுடன்தான் மேற்படி திட்டம் முன்னெடுக்கப்படுவதாக சம்பந்தப்பட்ட தரப்பினர் தெரிவிக்கின்ற போதும், அது போலியான அனுமதி எனவும் அவ்வாறு எந்தவொரு அனுமதியும் வழங்கப்படவில்லை எனவும் ரிஷாத் எம்.பி உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் சபையில் வலியுறுத்தினர்.

மேலும், பொதுமக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் தீங்கு விளைவிக்கின்ற காற்றாலை மின் உற்பத்தி திட்டம், மன்னார் தீவில் அமைக்கப்படக் கூடாது எனவும், மக்கள் நலனை கருத்திற்கொண்டு, அத்திட்டம் உடனடியாக இடைநிறுத்தப்பட வேண்டும் என்றும் ரிஷாத் எம்.பி சபையில் கோரிக்கை விடுத்தார்.

அதன் பிற்பாடு, அந்தத் திட்டம் உடனடியாக இடைநிறுத்தி வைக்கப்பட்டதுடன், மாவட்ட அபிவிருத்திக் குழு அதற்குரிய கடிதங்களை உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், முள்ளிக்குளம், சிலாவத்துறை கடற்படை முகாம்கள் அமைந்துள்ள மக்கள் குடியிருப்புக் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ரிஷாத் எம்.பி சுட்டிக்காட்டியதுடன், அது தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

அத்துடன், மன்னார் மாவட்டத்தில் ஏலவே ஆசிரியர் பற்றாக்குறை காணப்படும் பட்சத்தில், இங்குள்ள ஆசிரியர்களை வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்வதை நிறுத்துமாறும் ரிஷாத் எம்.பியினால் சபையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

மேலும், குறிப்பாக, வீதிப் புனரமைப்பு உள்ளிட்ட மன்னார் மாவட்டத்தின் இன்னோரன்ன அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் ரிஷாத் எம்.பியினால் சபையில் சுட்டிக்காட்டப்பட்டதுடன், வீதி புனரமைப்பு மற்றும் மாவட்டத்தின் அபிவிருத்தி திட்டங்களுக்காக ஒதுக்கப்படவுள்ள நிதிகளுக்கான அனுமதியும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# உணவு கையாளும் நிறுவன பணியாளர்களுக்கு தடுப்பூசி

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட உணவு கையாளும் நிறுவனங்களில் பணிபுரியும் நபர்களுக்கு தைபொய்ட் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் நேற்று (புதன்கிழமை) இடம் பெற்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகிலா இஸ்ஸடீனின் ஆலோசனைக்கமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இச்செயற்பாட்டில் 37 நபர்கள் தடுப்பூசி ஏற்றிக் கொண்டனர்

தைபொய்ட் என்பது ஒரு வகை பக்டீரியாவால் பரவும் ஒரு தீவிரமான தொற்று நோயாகும். இது மாசுபட்ட உணவு மற்றும் குடிநீரினால் பரவுவதுடன் இத் தொற்றினால் உலகலாவிய ரீதியில் கோடிக்கணக்கானோர் பாதிக்கப்படுகின்றனர்.

இந் நோயின் அறிகுறிகளாக நீண்ட நாள்களாக காய்ச்சல், வயிற்று வலி, ஈரல் மற்றும் முதுகு வலி, வாந்தி மனச் சோர்வு, குடல் சீர் கேடுகள் என்பன ஏற்படும்.

எனவே இதிலிருந்து பாதுகாப்பு பெற்றுக் கொள்ளும் ஒரே வழி அனைத்து உணவு கையாளும் நிறுவனங்களிலும் பணிபுரியும் நபர்களும் தடுப்பூசி ஏற்றி இத்தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதாகும் என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.



# புத்தளத்தில் சக வாழ்வுக்கான நினைவுச்சின்னம் திறந்துவைப்பு

(சியாஜ்)

புத்தளம் பாலாவியில் உள்ள முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகமும், மகளிர் எழுச்சி குரல் அங்கத்தவர்களும் இணைந்து புத்தளம் சோல்டன்- 01 முஹாஜிரீன் ஜும்ஆ பள்ளிவாசல் வளாகத்தில் 1990 ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் காரணமாக வடமாகாணத்திலிருந்து விடுதலை புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட இம் மக்களை புத்தளம் மக்கள் வரவேற்று அரவணைத்தனை நன்றி உணர்வோடு நினைவு கூரும் வண்ணம் இலங்கை வரலாற்றில் முதலாவது நினைவுச் சின்னமாக இது புத்தளத்தில் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புத்தளம் பாலாவி முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகத்தின் நிறைவேற்று பணிப்பாளர் எம். ஜுவைரியா முகைதீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட உதவி செயலாளர் கலந்து கொண்டு நினைவுச் சின்னத்தை திறந்து வைத்தார். அத்தோடு அரச அலுவலக பெண்கள் பொறுப்பதிகாரி, பொலிஸ் நிலைய அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உயர் அதிகாரிகள், மகளீர் சங்கங்களின் தலைவிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந் நினைவுச் சின்னம் அமைப்பதற்கான இடத்தை வழங்கி ஒத்துழைப்பு வழங்கிய புத்தளம் சோல்டன் 01 முஹாஜிரீன் பள்ளிவாசல் நிர்வாகத்தினை பாராட்டி கௌரவிக்கும் முகமாக பள்ளிவாசல் நிர்வாக தலைவர் எஸ் பஸ்மின் மற்றும் செயலாளர் ஏ. எம். சன்சைஸ் ஆகியோரிடம் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நிலைய நிறைவேறு பணிப்பாளர் எம். ஜுவைரியா முகைதீனின் கரங்களால் நினைவு பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு வட புல மக்களின் பலவந்த வெளியேற்றமானது ஒரு சம்பவமாக இருக்கக்கூடாது இது ஒரு வரலாற்று நிகழ்வாக கருதப்பட வேண்டும். எமது எதிர்கால சந்ததிகளுக்கும் கதை கூறுவதற்கான வரலாற்று மூலாதாரமாகவும் அமைய வேண்டும் என்ற அடிப்படையிலும் குறித்த நினைவுச் சின்னமானது அமைக்கப்பட்டுள்ளதுடன் இதில் இடம்பெயர்ந்த மக்களுக்கு அடைக்களம் கொடுத்த புத்தளம் மக்களின் கைகளின் அடையாளமும் அடைக்களம் தேடி வந்த வடபுல மக்களின் கால்களின் தடமும் பதிக்கப்பட்டு இந் நினைவுச் சின்னம் வடிவமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.





காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ஏமாற்றப்பட்டோரை மீட்பது அரசின் கடமைதான்

ரஷ்யா––உக்ரைன்போரின் இருண்டபக்கங்களில் இலங்கைமக்களின்குரலும்,கண்ணீரும்தொலைந்து போயிருக்கக்கூடாது. இலங்கையின் முன்னாள் படையினரைக் கூலிப்படையாக ஏமாற்றி அழைத்துச் சென்று, ரஷ்யாவின் தனியார் படைத்துறைகளில் போருக்கு உட்படுத்தியதன் விளைவாக, பலர் உயிரிழந்துள்ளனர் என்றும், பலர் காணாமல் போயுள்ளனர் எனவும், மற்றவர்கள் பலத்தமான அச்சுறுத்தல்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்றும் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இந்நிலையில், சிக்கியுள்ளவர்களை மீட்டுத் தரக்கோரி, அவர்களின் உறவினர்கள் நேற்று கொழும்பில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கண்ணீருடன் வலியுறுத்திய காட்சிகள், இலங்கைக்கு வெட்கக்கேடாகவே அமைகின்றன. இலங்கை ஆளும்தரப்பு இதற்குப் பேச்சு மட்டத்தில் அல்லாமல், உருப்படியான செயல் திட்டங்களுடன் தலையெடுக்க வேண்டியது காலப்பணியாக இருக்கிறது.

அண்மையில் வெளியான தகவலின்படி, சுமார் 280க்கும் மேற்பட்ட முன்னாள் இலங்கை படையினர் வேலைக்காக என்று சொல்லப்பட்ட உரிமற்ற வேலை வாய்ப்புகளின் வழியே ரஷ்யாவுக்குள் சென்றுள்ளனர். ஆனால், அவர்கள் மொழி புரியாத சூழலில்போருக்குகட்டாயமாகஅனுப்பப்பட்டுள்ளனர். இதில் குறைந்தது 16 பேர் உயிரிழந்திருக்கலாம் என்ற அபாய எச்சரிக்கையும் உறவினர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

இது வெறும் தனிநபர் நலனுக்கான பிரச்சினை அல்ல. இது இலங்கைக் குடிமக்களின் உரிமையைத் தூக்கி வீசும் மனித உரிமை மையம்கொண்ட அச்சுறுத்தல். மனிதக் கடத்தல், ஏமாற்று வேலை வாய்ப்பு, சட்டவிரோத ஆட்சேர்க்கை ஆகியவை அனைத்தும் சர்வதேச ஒப்பந்தங்களுக்கே எதிரானவை.

இவற்றை தடுப்பதற்கும், பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்கும், தனிப்பட்ட ராணுவ நிறுவனங்கள் மூலம் இலங்கையர்களை போருக்கு பயன்படுத்துவதை முற்றிலுமாக தடை செய்யவும் அரசு உடனடி நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இது தொடர்பான புலனாய்வுத் தகவல்களைப் பெற, வெளிநாட்டுத் தூதரகங்கள், இராஜதந்திர மட்டங்கள், மற்றும் சர்வதேசமனிதஉரிமைஅமைப்புகளுடன்இணைந்து செயல்படவேண்டும்.

இலங்கை மக்களின் உயிரும், ஒழுக்கமும், பாதுகாப்பும் அரசின் கையில் உள்ளது. அவர்கள் எங்கே சென்றாலும், அவர்களது நலனுக்காக ஆளும்தரப்புசெயலில்இருக்கவேண்டும். 'முன்னாள் படையினரை மீட்பது அரசு செய்யும் 'வீரதீர' செயல்' என்ற அடையாளத்தை நிலைநாட்ட வேண்டிய தருணமே இது.

# ஏறாவூரில் மாதுளம் பழங்களைத் திருடிக்கொண்டு ஓட்டமாவடியில் விற்பனைக்கு வந்தவர் சிக்கினார்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட நபர் ஒருவரை வாழைச்சேனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று (புதன்கிழமை) வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி பகுதியில் வைத்து இடம்பெற்றுள்ளது.

ஏறாவூரிலுள்ளபழவகைக்கடையொன்றில் மாதுளம்பழங்களை பெட்டியுடன் சூசகமாக திருடிய நபர் அதனை ஓட்டமாவடியிலுள்ள பழவகைக் கடை ஒன்றில் விற்பனை செய்ய வந்துள்ளார்.

ஓட்டமாவடியைச் சேர்ந்த பழவகைக் கடை உரிமையாளர் குறித்த நபர் மீது சந்தேகம் கொண்டதில் திருடன் வசமாக மாட்டியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அவசரமாக செயற்பட்ட வாழைச்சேனை பொலிஸார் குறித்த நபரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் பல திருட்டுச் சம்பவத்தில் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விடுதலையானவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைவாழைச்சேனைபொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் திருக்கோவிலில் கவனயீர்ப்பு போராட்டம்

(வி.ரி.சகாதேவராஜா)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் செவ்வாய்க்கிழமை திருக்கோவில் பகுதியில் போராட்டமொன்றை முன்னெடுத்தார்கள்.

.இந்த அமைதி வழி போராட்டமானது இலங்கை அரசிடம் நீதி கோரிய போதும் தீர்வுகள் கிடைக்காத நிலையில் தற்போது சர்வதேசத்திடம் நீதி கோரி போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி தம்பிராசா செல்வராணி தலைமையில் இடம்பெற்ற குறித்த கவனவீர்ப்பு போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போதுகவனவீர்ப்புபோராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எம் உறவுகள் எங்கே? மனிதம் பாதுகாக்கப்படுகிறதா? அரசே காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகள் எங்கே? காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நிரந்தர தீர்வை பெற்று தருவீர்களா? ஆகிய பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போதுகவனவீர்ப்பில்ஈடுபட்டவர்கள் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் புகைப்படங்களை ஏந்தியவாறும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதற்கு சர்வதேச விசாரணையை வலியுறுத்தி இந்த பேரணி இடம்பெற்றுள்ளது.






# செயற்கை நுண்ணறிவுசார் கருத்துப் பகிர்வும் உரையாடலும்

## யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 31வது வருடாந்த அமர்வுகளின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

செயற்கைநுண்ணறிவு சார்ந்த பல்துறை கருத்துப்பகிர்வும் கலந்துரையாடலும் நடைபெறும் . இதில் அனைவரையும் அன்புடன் பங்குபற்றுமாறு யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இன்றைய அமர்வில், 'கணினி உதவியுடன் மருந்து கண்டுபிடிப்புக்கான நுண்ணறிவு' என்ற தலைப்பில் கலாநிதி மாலினியும், 'உருவாகும் செயற்கை நுண்ணறிவு: கல்வித்துறையில் வாய்ப்புகளும் சவால்களும்' என்ற தலைப்பில் கலாநிதி கோகுலும், 'மருத்துவம் மற்றும் அவசர மருத்துவத்தில் செயற்கை நுண்ணறிவின் பங்களிப்பு' என்ற தலைப்பில் கலாநிதி மணிதீபன் கந்தையாவும், 'சந்தைப்படுத்தலில் செயற்கை நுண்ணறிவின் இணைவு' என்ற தலைப்பில் கலாநிதி ரஜுமேஷ் உம் கருத்துரைகளை வழங்குவார்கள்.

கருத்துரைகள் முறையே காலை 9.15, 9.45, 10.30 மற்றும் 11.00 மணிக்கு இடம்பெறும்.

# போதைப் பொருள் குற்றங்களுக்கு எதிர்காலத்தில் கடும் சட்டநவடிக்கை

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

போதைப்பொருள் வர்த்தகம் உள்ளிட்ட எந்தவொரு சட்டவிரோத செயற்பாடுகளையும் நாட்டுக்குள் அனுமதிக்க முடியாது. அதற்கு ஆளும்தரப்பும் ஒருபோதும் இடமளிக்கப்போவதுமில்லை. எதிர்காலத்தில் இவ்வாறான குற்றச்செயல்களுடன் தொடர்புடைய தரப்பினருக்கு பாரபட்சமின்றி கடுமையான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

தெற்கு ஆழ்கடல் பகுதியில் வைத்து இரண்டு மீன்பிடி படகுகளில் மீட்கப்பட்ட 600 கிலோவுக்கும் அதிக ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருள் இலங்கை கடற்படையினரால் நேற்று டிகோவிட்ட துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டன. இதனைப் பார்வையிடுவதற்காக பாதுகாப்பு பிரதி அமைச்சர் அங்கு சென்றிருந்தார். அங்கு செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைகடற்படையினருக்குகிடைக்கப்பெற்றஇரகசிய தகவலை அடிப்படையாக்கொண்டு அரச புலனாய்வு பிரிவினர் முப்படையினர் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகம் மற்றும் பிராந்தியத்தின் ஒருங்கிணைப்பு மையம் என அனைத்து தரப்பினரும் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தனர்.

நாட்டில் போதைப்பொருள் பாவனை கட்டுப்படுத்தும் நோக்கில்பிராந்தியங்களுக்குபொறுப்பானஒருங்கிணைந்த மையத்தின் உதவியுடன் கடந்த காலங்களில் இலங்கை கடற்படையினர் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கமைய போதைப்பொருள் வர்த்தகத்தை மேற்கொள்ளும் தரப்பினர் அதற்கு உதவி ஒத்தாசை வழங்கும் தரப்பினர் மற்றும் சட்ட விரோதமான முறையில் கடல் மார்க்கமாக படகுகளில் போதைப்பொருட்களை நாட்டிற்குள் கொண்டு வருபவர்கள் என பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இந்த நாட்டு மக்களுக்கு கௌரவமான வாழ்க்கையைப் பெற்றுக்கொடுப்பதேஎமதுஆளும்தரப்பின்கொள்கையாகும். அதில் போதைப்பொருளை முற்றாக ஒழித்து எதிர்கால சந்ததியினருக்கு வளமான நாட்டையும் அழகான எதிர்காலமொன்றையும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே எமது ஆளும்தரப்பும் முழுமூச்சாக செயற்படுகிறது.

தற்போதைய ஆளும்தரப்பும் ஆட்சிக்கு வந்ததில் இருந்து இதுவரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் ஊடாக 750 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள் 1650 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஹஷீஷ் போதை பொருள் உள்ளிட்ட பாரியளவிலான விஷ போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் இந்த சுற்றிவளைப்புகள் கடற்பகுதிகள் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் அதிகம் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே உரிய முறையில் தமது மீன்பிடி தொழிலை மேற்கொள்ளுமாறு கடற்றொழிலாளர்களிடம் வினயமாக கேட்டுக்கொள்கிறோம்.

இந்த நாட்டிலிருந்து போதைப்பொருளை ஒழிக்கும் பொறுப்பு எமக்கும் உங்களுக்கும் உள்ளது. கடற்றொழிலாளர்கள் எமது நாட்டின் தேசிய உற்பத்திக்கு பாரியளவில் பங்காற்றுகிறார்கள். ஆனால் ஒரு சிலர் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பில் எமக்கு பல தகவல்கள் கிடைத்துள்ளன. நாம் அது தொடர்பில கவனம் செலுத்தியுள்ளோம்.

போதைப்பொருள் வர்த்தகம் உள்ளிட்ட எந்தவொரு சட்டவிரோத செயற்பாடுகளை நாட்டிற்குள் அனுமதிக்க முடியாது. அதற்கு ஆளும்தரப்பும் ஒருபோதும் இடமளிக்க போவதுமிலல்லை. இவ்வாறான குற்றச் செயல்களுடன் தொடர்புடைய தரப்பினருக்கு பாரபட்சமின்றி கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார்.




# குச்சவெளி பிரதேச சபையில் ஆட்சியமைப்பதில் இழுபறி

(அபு அலா)

முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து குச்சவெளி பிரதேச சபையை ஆட்சியமைக்க தமிழ் அரசுக் கட்சியின் மூன்று உறுப்பினர்கள் தங்களின் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர். இதனால் குச்சவெளி பிரதேச சபையை இரு கட்சிகளும் இணைந்து ஆட்சியமைப்பதில் பாரிய இழுபறி நிலை தோன்றியுள்ளது.

திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேச சபை மற்றும் குச்சவெளி பிரதேச சபை ஆகியவற்றில் தமிழரசுக் கட்சி மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆகியன இணைந்து ஆட்சியமைப்பதற்கான பல நிபந்தனைகளுடன்கூடிய ஒப்பந்தம் செவ்வாய்க்கிழமை திருகோணமலை தமிழரசுக் கட்சி காரியாலயத்தில் கைச்சாத்திடப்பட்டது.

குறித்த ஒப்பந்தத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பாக அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.தௌபீக்கும் தமிழரசுக் கட்சி சார்பாக திருகோணமலை மாவட்ட குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சண்முகம் குகதாசன் ஆகியோர் கையொப்பமிட்டனர்.

குறித்த ஒப்பந்தத்தில் மூதூர் பிரதேச சபை மற்றும் குச்சவெளி பிரதேச சபை ஆகியவற்றில் இரு கட்சிகளும் தலா இரண்டு வருடங்களை பகிர்ந்து கொள்வதெனவும், மூதூர் பிரதேச சபையின் முதல் இரண்டு வருடங்களை தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவருக்கு தவிசாளர் பதவியையும், முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருக்கு உப தவிசாளர் பதவியை வழங்குவது எனவும் இறுதி இரண்டு வருடங்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருக்கு தவிசாளர் பதவியும், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு உப தவிசாளர் பதவியையும் வழங்குவதென முடிவெடுக்கப்பட்டது.

அதேபோன்று குச்சவெளி பிரதேச சபையில் முதல் இரண்டு வருடங்களை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருக்கு தவிசாளர் பதவியையும், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு உப தவிசாளர் பதவியை வழங்குவதெனவும், இறுதி இரண்டுவருடங்களுக்குதமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு தவிசாளர் பதவியையும், முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருக்கு உப தவிசாளர் பதவியையும் வழங்குவதெனவும் இணங்கியே இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுக் கொண்டனர்.

இந்நிலைமையில், குச்சவெளி பிரதேச சபையை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைக்க போகப் போவதில்லையென்று தமிழரசுக் கட்சியின் மூன்று உறுப்பினர்கள் தங்களின் எதிர்ப்பைத் தெரிவித்து நேற்றைய செவ்வாய்க்கிழதை நடந்த புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இளைஞர் யுவதிகளுக்கான மாபெரும் தொழிற் சந்தை

## தம்பலகாமத்தில் நடந்தது



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்ட தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் மாபெரும் தொழிற் சந்தை ஒன்று நேற்று (புதன்கிழமை) இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம் பெற்ற குறித்த தொழிற் சந்தையை தம்பலகாமம் பிரதேச செயலகமும் மனித வலு அபிவிருத்தி வேலை வாய்ப்பு திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

தொழில் வாய்ப்பற்ற இளைஞர்களுக்கானதொழில்வாய்ப்புக்களைபெற்றுக் கொள்ளவும் தொழில்வாண்மையான பாடநெறிகளை தொடர்வதற்குமான வாய்ப்புக்கள் இங்கு இடம் பெற்றன.

இதில் அரச சார்பற்ற தனியார் நிறுவனங்கள் அரச துறை சார் இரானுவ ஆட்சேர்ப்பு போன்ற பல துறைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகத் தேர்வுகள் இடம் பெற்றன.

இதில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், நிருவாக உத்தியோகத்தர் உடகெதர ,மனிதவலு வேலை வாய்ப்பு திணைக்கள மாவட்ட இணைப்பாளர்கள் ,அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொழிற்சந்தை நிகழ்வுகள்

(அபு அலா)

இலங்கைவெளிநாட்டுவேலை வாய்ப்புபணியகத்தால்ஏற்பாடு செய்யப்பட்ட வெளிநாட்டு தொழிற் சந்தை நிகழ்ச்சித் திட்டமென்று அம்பாறையில் நடாத்த திட்டமிட்டுள்ளதாக அதன் முகாமையாளர் மதுஷான் குலரத்ன தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு தேடுபவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந்தவெளிநாட்டு தொழிற் சந்தை நிகழ்வு நாளை (வெள்ளிக்கிழமை) காலை 9.00 மணிக்கு அம்பாறை திறந்த பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பாடசாலைக்குச் செல்வதை நிறுத்திக்கொண்ட மாணவர்களை வீடுவீடாகத் தேடிச்சென்று பிள்ளைகளுக்கு விழிப்புணர்வூட்டல்

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்திலுள்ள களுவன்கேணி கிராமங்களில் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்திக் கொண்ட, சீரற்ற வரவுள்ள மாணவர்களை வீடுவீடாகத் தேடிச் சென்று பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் விழிப்புணர்வூட்டும் நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

இவ்விதம் சீரற்ற, பின்னடைவான பாடசாலை வரவுகளைக் கொண்ட மாணவர்களும் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திக் கொண்ட மாணவர்களுமாக சுமார் 40 சிறார்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களது வீடுகளுக்குச் சென்று பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் பிள்ளைகளின் பாதுகாவலர்களுக்கும் விழிப்புணர்வூட்டப்பட்டதாகவும் அவர்களை மீண்டும் பாடசாலைக் கல்வியில் இணைத்துக் கொள்ள முடிந்ததாகவும் களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலய அதிபர் ரீ. பிராத்தனன் தெரிவித்தார்.

சேர்க்கிள் எனப்படும் இளம் பெண்கள் அமைப்பினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள பாடசாலைக்குத் தொடர்ச்சியான வரவைப் பதிவு செய்வதில் பின் தங்கியுள்ள மாணவர்களை சீரான பாடசாலை வரவுக்குச் சேர்ப்பிக்கும் இந்த வேலைத் திட்டத்திற்கு பொன் நிறுவனம் நிதி அனுசரணை வழங்குகிறது.

புதனன்று இடம்பெற்ற வீடு வீடாகச் சென்று மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் மாணவர்களின் பாதுகாவலர்களுக்கும் விழிப்புணர்வூட்டும் கள விஜயத்தின்போது ஏறாவூர்ப்பற்றுபிரதேசசெயலகசிறுவர்உரிமை மேம்பாட்டு பிரிவு, கிராம அலுவலர்கள், சேர்க்கிள் நிறுவனத்தின் களுவன்கேணி பரிந்துரைவலையமைப்பிலுள்ளஉறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

இவ்வாறுமாணவர்கள்பாடசாலைவரவில் பின்னடைவாவதற்கும் இடை விலகுவதற்கும் மாணவர்களது குடும்பங்கள் எதிர்கொள்ளும் வறுமை, பொருளாதார நெருக்கடி இவற்றின் காரணமாக பிள்ளைகளைக் கைவிட்டு தாய்மார் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்களாகச் செல்வது, பெற்றோரின் பிரிவு, பதிவு செய்யப்படாத திருமண உறவுகள்., கல்விபற்றிய போதிய விழிப்புணர்வின்மை ஆகியவை தகவல் திரட்டு ஆய்வின்போது காரணங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன என சேர்க்கிள் இளம் பெண்கள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஜானிகாசிநாதர் தெரிவித்தார்.

வறுமை காரணமாக கல்வி பாதிக்கப்பட்டுள்ள சில மாணவர்களின் குடும்பங்களுக்கு உதவி ஊக்குவிப்புக்களை வழங்க சேர்க்கிள் நிறுவனம் கரிசனை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் பாடசாலைக் கல்வியில் பின்தங்கிய கிராமப்புற மாணவர்களும் அவர்களது குடும்பங்களும் எதிர்கொள்ளும் வறுமை பொருளாதார நெருக்கடி, சவால் நிறைந்த சமூக சூழ்நிலைகளுக்குத் தீர்வாக தெளிவான பொறிமுறை கண்டாகப்படவேண்டியதன் அவசியத்தை இந்த விடயத்தோடு





தொடர்புபட்ட அலுவலர்கள் உணர்ந்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வூட்டும் கள விஜயத்தின்போது ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.ஆர் முஹம்மத் றுசைத் தலைமையிலான பணிக் குழுவினர், கல்குடா கல்வி வலய முறைசாராக் கல்விக்குப் பொறுப்பான ஆசிரிய ஆலோசகர் எம். விஜிலியஸ், கிராம அலுவலர்களான எம். மயூரிக்கா, எம். கமலரூபன், பாடசாலை உளநல ஆலோசகர் எம். மலர்மதி முரளீதரன், சேர்க்கிள் இளம் பெண்கள் அமைப்பின் வெளிக்கள இணைப்பாளர் கே. ஜெயவாணி உட்பட இன்னும் பல அதிகாரிகளும் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்.




# மாணவத் தூதுவர் தேசிய நிகழ்ச்சித்திட்டம் - 2025

(ஹஸ்பர் ஏ.எச்)

சிறுவர் பாதுகாப்பு தொடர்பான மாணவத் தூதுவர் தேசிய வேலைத்திட்டம் தொடர்பான அதிபர்களுக்கான செயலமர்வானதுதிருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார தலைமையில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன் அவர்களின் பங்குபற்றலுடன் நேற்று (புதன்கிழமை) மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கல்வி அமைச்சுடன் இணைந்து இந்த நிகழ்ச்சித்திட்டத்தை ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போதுவளவாளர்களாக திருகோணமலை பொது வைத்தியசாலையின் உள வைத்திய நிபுணர் பி. டிமிது மகேந்திரா மற்றும் மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் மு.மு.மு.ஸம்ஸீத் ஆகியோர்கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

மேலும் அதிபர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தக்க பதிலும் போதியளவிலான விளக்கங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட மற்றும் பிரதேச உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# மட்டக்களப்பில் வீட்டுத் திட்டத்திற்கு 85 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(சக்திவேல்)



மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மொத்தமாக 85 மில்லியன் ரூபா நிதியினை வீடமைப்பு திட்டங்களுக்காக நாம் ஒதுக்கீடு செய்திருக்கின்றோம். எதிர்வரும் காலங்களில் இது போல் பல வீடமைப்புத் திட்டங்களை நாங்கள் உருவாக்குவதற்கு தயாராக உள்ளோம். அதற்கான நிதி ஒதுக்கீடுகளையும் எமது பிரதேசங்களுக்கும் ஒதுக்கீடு செய்வதற்காக ஜனாதிபதி அவர்களும் முன்னிலைப்படுத்தி இருக்கின்றார்.

என தேசிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்டவத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கான அபிவிருத்திக்குழுத் தலைவருமான கந்தசாமி பிரபு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குருக்கள்மடம்கிராமத்தில்பூர்த்திசெய்யப்படாமலுள்ள வீடமைப்புத் திட்டத்தை நிவர்த்தி செய்வதற்காக அதிலுள்ள 16 பயனாளிகளுக்கு 2.98 மில்லியன் நிதி வழங்கி செவ்வாய்கிழமை வைக்கப்பட்டன. இதன்போது கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நிதி வழங்கிவிட்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்

2018 ஆம் ஆண்டு வீடு அமைப்பு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. பின்னர் அது நிதி கிடைக்கப்பெறாத காரணத்தினால் அத்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படாமல்கைவிடப்பட்டுள்ளன. மீண்டும் அத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக எமது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதற்கான நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்கீடுசெய்திருக்கின்றோம். அந்த அடிப்படையில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட குருக்கள்மடம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டத்தில் உள்ள 16 பயனாளிகளுக்கும் அவர்களுடைய வீடுகளைபூர்த்திசெய்வதற்காகவேண்டிமுதற்கட்டமாக ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதுபோல் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மொத்தமாக 85 மில்லியன் ரூபா நிதியினை வீடமைப்பு திட்டங்களுக்காக நாம் ஒதுக்கீடு செய்திருக்கின்றோம். எதிர்வரும் காலங்களில் இதுபோல் பல வீடமைப்பு திட்டங்களை நாங்கள் உருவாக்குவதற்கு தயாராக உள்ளோம். அதற்கான நிதி ஒதுக்கீடுகளையும் எமது பிரதேசங்களுக்கும் ஒதுக்கீடு செய்வதற்காக ஜனாதிபதி அவர்களும் முன்னிலைப்படுத்தி இருக்கின்றார்.

வடக்கு கிழக்கு பிரதேசங்களிலே உள்ள வீடு இன்றி தவிக்கின்ற மக்களுக்கு அவர்களின் வீட்டு தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக நாம் இவ்வாறான மாதிரி வீட்டு திட்டங்களை உருவாக்கி அதனூடாக மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக அதற்கான வேலைகளை நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம். என தெரிவித்தார் அவர், ஊடகவியலாளர்கள் அவரிடம் கேட்ட கேள்விகளுக்கும் அவர் பதிலழிக்கையில் –

காணி தொடர்பான சட்டம் ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. அந்த விடயம் தொடர்பாக கடந்த நாடாளுமன்றத்திலே வடக்கு கிழக்கு உள்ள தமிழ் பிரதிநிதிகள் பிரதமரை சந்தித்து நாங்கள் அது தொடர்பில் பேசி இருந்தோம். அந்த சட்டம் தொடர்பாக தற்கால நிலைமை தொடர்பாகவும் அந்த சட்டத்தில் இருக்கின்ற குறைகள் தொடர்பாகவும் நாங்கள் பேசி இருந்தோம். சட்டத்தை தற்போதைய நிலைக்கு இடைநிறுத்துவதாக பிரதமர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கின்றார். மேலும் பல விடயங்களை நாங்கள் மக்கள் நலம் சார்ந்ததாக வடக்கு கிழக்கிலே இருக்கின்ற தமிழ் மக்கள் சார்பாகவும் தொடர்ச்சியாக நாங்கள் செயற்பட்டு வருகின்றோம்.

அதுபோல் அங்கவீனமானவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தொகை தற்போது அதிகரிக்கப்பட்டு அவர்களின் விசேட உபகரணங்களை பெற்றுக் கொடுப்பதற்காக வேண்டி 50000 ரூபா வரைக்கும் அதனை அதிகரித்திருக்கின்றோம். இவ்வாறு நாட்டு மக்களுக்கு தேவையான பல்வேறு நன்மைகளை எங்களுடைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சார்பாக நாங்கள் தொடர்ச்சியாக நிதிகளை வழங்கி செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

மக்களுக்குவழங்கியவாக்குறுதிகளைகுறுகியகாலத்தில்நிறைவேற்றுவதற்கு கால அவகாசம் எமக்குப் போதாது. தற்போது நிலையில் ஆறு மாத காலம் தான் கடந்திருக்கின்றன. இந்நிலையில் சட்டத்தில் இருக்கின்ற சில விடயங்களை நாங்கள் மாற்ற வேண்டி இருக்கின்றது. அது தொடர்பாக பல விடயங்கள் கலந்துரையாடி அது தொடர்பில் இருக்கின்றன எதையும் குறுகிய காலத்தில் செயற்படுத்த முடியாது. எமது அரசாங்கத்தின் ஐந்து வருட கால ஆட்சி காலத்தில் நிச்சயமாக நாங்கள் தொடர்ச்சியான ஏற்பாடுகள் மேற்கொண்டு வேலைத்திட்டங்களை நாங்கள் செயற்படுத்துவோம்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிவுகளின்படி வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் எமக்கு நாம் இரண்டாம் நிலையில் இருக்கின்ற கட்சியாக தான் நாம் இருக்கின்றோம். பல கட்சிகள் எம்முடன் இணைந்து ஆட்சி அமைப்பதற்காக முயற்சிகளை மேற்கொண்டு இருக்கின்றார்கள். நாங்கள் இதுவரைக்கும் எந்தவித முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை. ஆனாலும் மற்றைய கட்சிகளுடன் இணைந்து செயல்படுவதில் எந்த அபிப்பிராயங்களும் இல்லை. ஆனால் மக்களின் தேவை எதுவாக இருக்குமாக இருந்தாலும் அந்த தேவைகளின் படி நாங்கள் பயணிப்பதில் நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

நாட்டில் துப்பாக்கி கலாசாரம் என்பது பாதாள உலகம் கோஸ்டிகளின் சம்பந்தப்பட்டவர்களின் நடவடிக்கையாக தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு குற்ற செயல்களுக்கு பின்னாலும் ஒவ்வொரு கடந்த கால அரசியல்வாதிகள் தொடர்புகள் இருக்கின்றனதனை காண்கின்றோம். அதேபோன்று அதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். அதற்காக பலபேர் கைது செய்யப்பட்டு கொண்டிருக்கின்றார்கள். விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. அந்த வகையில் சட்டத்தின் பிரகாரம் அவர்களுக்கான தண்டனை வழங்கப்படும். – என்றார்.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் உ.உதயசிறிதர், தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் த.சுபாஸ்கரன், உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.



## இன, மத ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜித்த ஹேரத்துக்கும் இடையிலான சந்திப்பு அயலுறவுத்துறை அமைச்சில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கான வீசாவைப் பெற்றுக்கொள்வதில் இலங்கையர்கள் முகங்கொடுத்துவரும் சிக்கல்கள் தொடர்பில் அமைச்சர் விஜித்த ஹேரத் சுட்டிக்காட்டினார். அதனை செவிமடுத்த போலந்து அயலுறவுத்துறை அமைச்சர் இந்நெருக்கடிக்குத் தீர்வாக அமையக்கூடிய வகையில் இலங்கையில் புதிய அலுவலகமொன்றை நிறுவுவது குறித்து அவதானம் செலுத்துவதாக உறுதியளித்தார்.

அதேவேளை ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைத் தொடர்ந்து வழங்குவதற்கு ஐரோப்பியஒன்றியத்தினால்மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கும், இலங்கையின் சுபீட்சத்துக்கு ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ச்சியாக வழங்கிவரும் ஒத்துழைப்புக்களுக்கும் அமைச்சர் விஜித்த ஹேரத் நன்றி தெரிவித்தார்.

அத்தோடு எந்தவொரு இன, மத பிரிவினருக்கும் வெவ்வேறு விதமாக நடத்தப்படாமல் இருப்பதை உறுதிசெய்யக் கூடியவகையில் சட்டத்திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

அதேபோன்று இலங்கையின் இரண்டாவது பெரிய ஏற்றுமதி சந்தையாகத் திகழும் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையுடனான வர்த்தகத் தொடர்புகளை மேலும் விரிவுபடுத்திக்கொள்வதற்கு விரும்புவதாகவும், இலங்கையில் முதலீடுகளை அதிகரிப்பதற்கும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் அவசியமான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் போலந்து குடியரசின் அயலுறவுத்துறை அமைச்சர் ரெடொஸ்லாவ் சிகோர்ஸ்கி உறுதியளித்தார்.

## உக்ரைன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிலர் பற்றி எவ்வித தகவல்களும் இல்லை. ஆளும்தரப்புக்கு இவ்விடயம் தொடர்பில் அறிவித்துள்ளபோதும் தமது உறவுகளை மீட்பதற்காக எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வில்லை என தெரிவித்து பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நண்பகல் அளவில் கோட்டை தொடருந்து நிலையம் முன்பாக ஒன்றிணைந்த போராட்டக்காரர்கள், தமது உறவினர்களை மீட்டு தருதல், இராஜதந்திர மட்டத்தில் அதற்கான நடவடிக்கைகளை எடுத்தல், வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு இந்த முன்னாள் படையினரின் குடும்பங்களுக்கு இடைநிறுத்தப்பட்ட ஓய்வூதியத்தை மீள வழங்குதல் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தினர். தமது கோரிக்கைகள் தொடர்பில் குரல் எழுப்பிய அவர்கள் பதாகைகளை ஏந்தியும் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'கடந்த ஒரு வருட காலமாக ரஷ்யாவில் உள்ள எமது உறவுகளை மீட்டு தருமாறு ஆளும்தரப்பிடம் கோரிக்கை விடுத்து வருகிறோம். எனினும் ஆட்சியில் இருந்த எந்த ஆளும்தரப்பும் எமது பிரச்சினை தொடர்பில் அவதானம் செலுத்தவில்லை. கடந்த ஆளும்தரப்பும் தற்போது ஆட்சியில் உள்ள ஆளும்தரப்பிடமும் கலந்துரையாடி கடிதங்களையும் சமர்ப்பித்துள்ளோம். எனினும் எமக்கான தீர்வு வழங்கப்பட வில்லை.

உக்ரைன் போரில் ஈடுபட்ட பல முன்னாள் படையினர் உயிரிழந்துள்ளதுடன், இன்னும் ஒரு சிலர் தொடர்பில் எவ்வித தகவல்களும் இல்லை. பல குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழந்து நிர்கதியாகியுள்ளன. படையினருக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியமும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் ஆளும்தரப்பும் முன்னரே தலையீடு செய்திருக்குமாயின் பலரை மீட்டிருக்கலாம். உக்ரைன் படையினரால் இலங்கைப் படையினர் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்" என்று உக்ரைன் ரஷ்யா போருக்கு மத்தியில் பாதிக்கப்பட்டவர்களின் சங்கத் தலைவர் ஜயதிலக்க தெரிவித்தார்.

## பொதுப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பு கூறவும் வேண்டும். தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் ஊழல்களில் பிமல் ரத்நாயக்க முன்னோடியாகவுள்ளார். ஒருபுறம் இவ்வாறு மோசடிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஆளும்தரப்பும் மறுபுறம் மின் கட்டணத்தை அதிகரித்து அந்த சுமையை மக்கள் சுமத்துவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

அதன் ஓர் அங்கமாக சுயாதீன ஆணைக்குழுவான பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரத்தை நீக்குவதற்கான ஏற்பாடுகளை புதிய மின்சாரசபை சட்டத்தில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகிறது. அதற்கமைய மின் கட்டணம் தொடர்பான இறுதி தீர்மானத்தை எடுப்பதற்கு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்குகாணப்படும் அதிகாரத்தை, நிதி அமைச்சின் வசமாக்குவதற்கான உள்ளடக்கங்கள் குறித்த சட்ட மூலத்தில் உள்ளடக்கப்படவுள்ளன.

இது பிரஜைகளின் உரிமைகளை முடக்கும் அநீதியான செயற்பாடாகும். நாட்டின் மின் பாவனையாளர்கள் பெற்றுக்கொண்ட உரிமையை மீளப்பெறும் செயற்பாடாகும். நாட்டு பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாப்போம் என உறுதியளித்து ஆட்சியைக்கைப்பற்றிய ஆளும்தரப்பும், மக்களின் உரிமைக்காக நிறுவப்பட்ட பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவை அதிகாரமற்றதாக்குவதற்காக செயற்பட்டு வருகிறது. இது வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரத்தைக் குறைப்பதற்கான எந்தவொரு சட்ட மூலத்துக்கும் ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்காது. அதுமாத்திரமின்றி ஆளும்தரப்பும் அவ்வாறானதொரு சட்ட மூலத்தை முன்வைக்கும் பட்சத்தில் அதற்கெதிராக உயர் நீதிமன்றத்திடம் சென்று நியாயம் கோருவதற்கும் பின்வாங்கப் போவதில்லை. ஜனநாயகம் என்பது மக்களின் விருப்பமாகும். அந்த ஜனநாயகத்தை இல்லாதொழிப்பதற்கும் ஆளும்தரப்புக்கு இடமளிக்கப்பட மாட்டாது என்றார்.

## ஐ.தே.க. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய கட்சி யானை சின்னத்தில் தனித்துப் போட்டியிட்ட முதலாவது தேர்தலாகும் இது.

இந்த தேர்தலில் மொத்தமாக 377 உறுப்பினர்களை ஐக்கிய தேசிய கட்சி பெற்றுள்ளது. இதில் ஐக்கிய தேசிய கட்சியின் கோட்டையாகக் கருதப்பட்டு வந்த கொழும்பு மாநகர சபையில் அதற்கு அதிக உறுப்பினர்களாக 13 பேர் தெரிவாகியுள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சியில் சார்பில் தெரிவாகியுள்ள இந்த 377 உறுப்பினர்களும் இன்று ரணில் விக்ரமசிங்க தலைமையில் பதவியேற்றுக்கொள்வர்.

# வெட்டுக்கண்ணிக் குளத்தில் 300 மீன்குஞ்சுகள் விடப்பட்டன

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திருப்பழுகாமம் கிராமத்தில் அமைந்துள்ள வெட்டுக் கண்ணிக் குளத்தில் வளர்ப்புக்காக 300 மீன்குஞ்சுகள் நேற்று (புதன்கிழமை) விடப்பட்டன.

கதிரவன் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் சோ.ரங்கநாதன், நன்நீர் மீன்பிடித் திணைக்களத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் சுதாகரன், மற்றும் அப்பகுதி மீனவர்கள், கதிரவன் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் அங்கத்தவர்கள் எனபலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.



நேற்றைய தினம் முதற்கட்டமாக 300 மீன்குஞ்சுகள் இதன்போது குளத்தில் விடப்பட்டன. அடுத்தவாரம் 30 ஆயிரம் மீன்குஞ்சுகள் இக்குளத்தில் விடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கதிரவன் மாற்றுத்திறனாளிகள் அமைப்பினர் இதன்போது தெரிவித்தனர்.





# திருகோணமலை மாநகர மேயராக தமிழ் அரசு சார்பில் கந்தசாமி செல்வராசா தெரிவாகினார்

## சண்முகம் குகதாசன் எம்.பி. தெரிவிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாநகர சபை மேயராக இலங்கைத் தமிழரசு கட்சியில் இம் முறை நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வெற்றியீட்டிய கந்தசாமி செல்வராசா பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று (புதன்கிழமை) கட்சியின் மாவட்ட கிளையில் இடம் பெற்றது. இதன் போது தமிழரசு கட்சியின் மாவட்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சண்முகம் குகதாசன் ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

மேற்படி கலந்துரையாடலின் போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ச.குகதாசன் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வெற்றிபெற்ற இலங்கை தமிழரசு கட்சியினை சேர்ந்தவர்கள் ஒன்பது பேரும் ஒன்று கூடி திருகோணமலை மாநகர சபை மேயருக்காக ஜனநாயக ரீதியாக கந்தசாமி செல்வராசா (சுப்ரா) தெரிவாகி பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

மாநகர மேயர் தெரிவின் போது ஒன்பது உறுப்பினர்களும் ஆதரவாக மேயர் தெரிவின் போது செயற்படுவார்கள் என மேலும் தெரிவித்தார்.

கலந்துரையாடலின்பின்கருத்துதெரிவித்த மேயராக பரிந்துரை செய்யப்பட்ட கந்தசாமி செல்வராசா -

ஜனநாயகரீதியாகவாக்கெடுப்புமூலமாக என்னை மேயராக பரிந்துரை செய்து தெரிவு செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றிகளை தெரிவிப்பதோடு எனது வட்டார மக்களுக்கும் நன்றிகளை தெரிவிக்கிறேன். அத்துடன் மாநகர மேயர் பதவியின் பின் திருகோணமலை நகர அபிவிருத்திக்காக சமமான வள பங்கீடு மூலமாக அபிவிருத்தி திட்டங்களை திறம்பட முன்னெடுக்கவும் அனுபவம் மூலமாக எதிர்கால திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் எனது சேவைக் காலத்தின் போது முன்னெடுப்பேன். - என்றார்.

# வலய மட்ட தமிழ் மொழி தினப் போட்டிகளில் வெலம்பொட முஸ்லிம் மகாவித்தி முதலிடம்!

(ஹமீட்)

கம்தெனுவர கல்வி வலயத்தில் உள்ள 18 தமிழ்மொழி பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற அகில இலங்கை தமிழ்மொழி தின போட்டிகளில் 17 இடங்களைப் பெற்று வெலம்பொட முஸ்லிம் மகாவித்தியாலயம் முதல் இடத்தை பெற்றுள்ளது.

**முதலாம் இடங்கள் (10)**

1. பிரிவு ஒன்று- கட்டுரை வரைதல் -பி.ஏ.ஹிக்மா
2. பிரிவு நான்கு- சிறுகதை ஆக்கம் எம்.பி.ஆத்திகா
3. பிரிவு நான்கு- குறு நாடக ஆக்கம் எம்.ஜ.கதீஜா
4. பிரிவு மூன்று வாசிப்பு- கே.ஷிம்லா
5. பிரிவு மூன்று பேச்சு-எம்.எஸ்.எப்.சல்ஹா
6. பிரிவு ஐந்து- பேச்சு. எம்.எஸ்.எப்.ஷீமா
7. பிரிவு இரண்டு- பாவோதல். எம்.எஸ்.எப்.ஹம்னா
8. பிரிவு மூன்று- பாவோதல். எம்.ஜ.அப்ரா
9. பிரிவு ஐந்து- இலக்கிய விமர்சனம். எம்.எஸ்.எப்.சிப்னா
10 பிரிவு ஐந்து- அறிவிப்பாளர். எம்.ஆர்.எப்.அம்னா

**இரண்டாம் இடங்கள்(03)**

1.பிரிவு நான்கு- கட்டுரை வரைதல் : எம்.ஜ.அம்ரா

2 பிரிவு இரண்டு- பேச்சு: ஆர்.எப்.எப்.ரஹ்மா

3 தமிழறிவு வினா விடை: பி.யு.இல்மா, எம்.சைனப், எம்.ஏ.எஸ்.அஸீமா, எம்.எப்.எப்.நாதியா, ஏ.எப்.ஆதிபா

**மூன்றாம் இடங்கள் (04)**

1.வினா விடை எழுத்துப்போட்டி- கே.ஷிம்லா, எம்.ஆர்.பாத்திமா, எம்.ஐ.ஸய்னா, எம்.என்.அக்மல், எம்.ஆர்.எப்.சின்பா

2.பிரிவு நான்கு- பாவோதல்: எம்.ஜி.எம்.மிப்ரா

3.பிரிவு நான்கு- தனி நடிப்பு: எம்.எஸ்.எப்.ஸம்ரா

4 திறந்த போட்டி- விவாதம்: எம்.எம்.எப்.சஹ்லா, ஏ.ஏ.ஸபா, எம்.ஆர்.எப்.அம்னா

இம்மாணவர்களை பயிற்றுவித்து வழிப்படுத்திய யஸீரா, நிஹாரா, ரிஸ்வானா, ஷிஹானா, றிஸாமா, அன்சார், மஸாஹிமா ஆகியோருக்கு பாடசாலை

# உணவு ஒவ்வாமை காரணமாக 21 மாணவர் வைத்தியசாலையில்!

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு பகுதியில் அமைந்துள்ள பாரதி வித்யாலயத்தின் நேற்றைய தினம் (புதன்கிழமை) மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு உவாமை காரணமாக ஒரே வகுப்பைச் சேர்ந்த 21 மாணவர்கள் உணவு ஒவ்வாமை காரணமாக தர்மபுர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக 10 மாணவர்கள் கிளிநோச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம்தொடர்பாகபுதுக்குடியிருப்பு சுகாதார பரிசோதர்கள் உணவின் மாதிரியை பெற்றுச் சென்றுள்ளனர்.

இருப்பினும் ஏனைய வகுப்பு சேர்ந்த எந்த ஒரு மாணவர்களுக்கும் உணவு ஒவ்வாமை ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். 113






# 33 வருடச் சேவையிலிருந்து அதிபர் சுந்தரநாதன் ஓய்வு;

(வி.ரி.சகாதேவராஜா )

33 வருட கால கல்விச் சேவையிலிருந்து முதலைக்குடா மகா வித்தியாலய அதிபர் வயிரமுத்து சுந்தரநாதன் நேற்று தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்றார்.

அவரது சேவை நலன் பாராட்டு விழாவும் பிரியாவிடை வைபவமும் நேற்று பிரதி அதிபர் எஸ்.கிருபாகரன் தலைமையில் பாடசாலையில் கோலாகலமாக நடைபெற்றது .

பிரதம அதிதியாக மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் யோ. ஜெயச்சந்திரன் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக அதிபரின் சிவானந்தா நண்பர்களான ஓய்நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, ஓய்வு நிலை அதிபரும் முன்னாள் தவிசாளருமான சிவ. அகிலேஸ்வரன், ஓய்வு நிலை அதிபர் பூ.நவரெத்தினராசா உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள் .

அங்கே பணிப்பாளர் ஜெயச்சந்திரன் உரையாற்றுகையில் -

மிகவும் வசதி குறைந்த வலயத்துக்கு வருகை தந்த பொழுது என்னை முதன் முதலில் வரவேற்றவர் அதிபர் சுந்தரநாதன் அவர்கள். அவர் பணியாற்றிய பாடசாலைகள் எல்லாம் பாடசாலையின் தரத்தை உயர்த்தியது மட்டும் இல்லாமல் மாணவர்களின் அடைவு வீதத்தையும் உச்ச கட்டத்துக்கு கொண்டு சென்றிருக்கின்றார். இவர் போன்ற அதிபர்கள் உருவாக வேண்டும் .

ஒருவர் ஓய்வு பெறுகின்ற பொழுது இன்னும் சில காலம் இவர் பணியாற்றக் கூடாதா? அவரை பணிக்கு இன்னும் சில காலம் அமர்த்தித் தாருங்கள் என்று பலரும் கேட்க வேண்டும்.

அப்படி ஒருவரது சேவை அமைய வேண்டும்.

அப்படி பார்த்தால் சுந்தரநாதன் அவர்கள் 100 வீதம் அர்ப்பணிப்பான சேவையாற்றி விட்டு இன்று எம்மை விட்டு போகின்றார். அவரது ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துக்கள். - என்றார்

ஓய்வு நிலை பணிப்பாளர் வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா பேசுகையில் -

நண்பர் சுந்தரநாதன் நாங்கள் எல்லாம் சிவானந்தாவிலே ஒன்றாக படித்தவர்கள். விளையும் பயிரை முளையில் தெரியும் என்பார்கள். அன்றே அவரது ஆளுமையை என்னால் காணக்கூடியதாக இருந்தது.

அவர் சேவையாற்றிய பன்சேனை வித்தியாலயம், காயான்மடு வித்தியாலயம், கொத்தியாபுல வித்யாலயம், இறுதியாக முதலைக்குடா மகா வித்தியாலயம் எல்லாம் உச்சகட்ட அபிவிருத்தியை கண்டிருக்கின்றன. மாணவர்களின் அடைவு மட்டமும் உச்சத்தை அடைந்திருக்கின்றது . வாழ்த்துக்கள் பாராட்டுக்கள்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்திலே மட்டக்களப்பு மேற்கு வலயம் அன்று ஒரு சிறிய புள்ளியாக இருந்தது .இன்று சகல பரீட்சைகளிலும் புறக் கிருத்திய செயற்பாடுகளிலும் அடைவு மட்டங்கள் முதலிடத்தை வகிக்கின்றன. கிழக்கில் முன்னணி வலயமாக தலைசிறந்து விளங்குகிறது.

அந்த வகையிலே நண்பர் ஜெயச்சந்திரன் மிகவும் அர்ப்பணிப்பான சேவையை செய்திருக்கின்றார். வாழ்த்துக்கள் .

இறுதியாக ஓய்வுபெறும் அதிபர் சுந்தரநாதன் அவர்களுக்கு, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மற்றும் அவரது சிவானந்தா நண்பர்களான சிவ.அகிலேஸ்வரன் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவித்தார்கள்.

கோட்ட அதிபர்கள் பாடசாலை அதிபர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

சுந்தரநாதன் இலங்கை அதிபர் சேவையின் முதலாந்தர அதிபராவார். கல்வி சமய சமூக பொருளாதார ஆன்மீக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது.



## பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் முன்பாக கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்!



வடமாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தை தவிர்ந்த விவசாய திணைக்களத்தின் பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த ஒப்பந்த அடிப்படையில் பல வருட காலம் பணிபுரியும் ஊழியர்கள் கிளிநொச்சி இரணைமடு சந்தியிலுள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இறுதியாக 2014ஆம் ஆண்டு சில ஊழியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்ட போதும் ஏனையவர்களுக்கு இன்றுவரை நியமனம் வழங்கப்படவில்லை.

2014 ஆம் ஆண்டு நியமனம் வழங்கும் போது சில ஊழியர்கள் 180நாள்களுக்கு ஓரிரு நாள்கள் குறைவாக காணப்பட்ட ஊழியர்களும்பன்னிரண்டுவருடங்களுக்கு மேலாக நியமனம் இன்றி இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

தமக்கான நிரந்தர நியமனத்தை வழங்க



அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்து குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.316

## கிழக்கு மாகாண ஆசிரியைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் தாஹிர் நடவடிக்கை

(பாறுக் ஷிஹான்)



கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த துரப் பிரதேசங்களுக்கு புதிதாக நியமனம் பெற்ற ஆங்கில ஆசிரியைகளின் அசௌகரியங்களை கருத்தில் கொண்டு பொருத்தமான இடமாற்றத்தை வழங்க வேண்டுமெனகிழக்குஆளுநரிடம்நேரடியாக வலியுறுத்தினார் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர்.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபோதேஇவ்வாறு கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

துரப் பிரதேசங்களுக்கு நியமனம் பெற்ற ஆசிரியைகள் எதிர்கொள்ளும் மொழி மற்றும் பிரயாண அசௌகரியங்களை கிழக்கு மாகாண ஆளுநருக்கு விரிவாக இதன்போது எடுத்துரைத்திருந்தார்.

இதற்கு பதில் வழங்கிய ஆளுநர், இது சம்பந்தமாக உடனடி நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும்இந்நிகழ்வில்கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான நிசாம் காரியப்பர், எம்.எஸ்.உதுமாலெப்பை, மஞ்சுல சுகத் ரத்நாயக, பிரியந்த விஜயரத்ன ஏ.எம்.எம்.ரத்வத்த உட்பட மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எம்.மனாஸிர் உட்பட பிரதேசசெயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் கிழக்கு மாகாண சபையின் உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் மற்றும் முப்படைகளின் பிரதானிகளும் கலந்து கொண்டனர். இங்கு பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.



## அம்பாறை மாவட்டத்தின் ஒருங்கிணைப்பு கூட்டம்

(பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்ட விசேட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் அம்பாறை மாவட்ட செயலக மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேயவிக்கிரம ஏற்பாட்டில் கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்குரிய பல நாள் மீன்பிடிப் படகுகளில் மீன் பிடிக்கப்படுவதால், அம்மீனவர்களின் மீன் அறுவடையை ஆழ்கடலில் களவெடுப்பதற்கு அமைய, விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கவும் இது தொடர்பாக பேசி, இம்மீன் கொள்ளையை நிறுத்துவதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவாவால் பிரேரணை முன்வைக்கப்பட்டது. இந்தப் பிரேரணை ஆராயப்பட்டு, அது தொடர்பாக அறிக்கை ஒன்றினை உடனடியாக ஜனாதிபதிக்கும் மீன்பிடி அமைச்சிற்கும் அதுபோன்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி மீன் கொள்ளை தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுப்பதற்கான தீர்மானமும் அம்பாறை மாவட்ட செயலகத்தில் பெறப்பட்டது.

இதில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், மு. கா. பிரதித் தேசிய அமைப்பாளர் எம்.எஸ்.உதுமாலெப்பை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளர் அஷ்ரப் தாஹிர், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா, மஞ்சுல சுகத் ரத்நாயக, பிரியந்த விஜயரத்ன, ஏ.எம்.எம்.ரத்வத்த மற்றும் திணைக்கள தலைவர்கள், உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அத்துடன் மீனவர்களின் மற்றுமொரு பிரச்சினையான கடல் அரிப்பு தொடர்பாக ஏற்பட்ட பாதிப்புகளைக் கண்டறிவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா ஸ்தலத்திற்கு விஜயம் செய்ததோடு கல்முனை பிரதேசத்தில் உள்ள கடலரிப்புக்குள்ளான பிரதேசங்களில் உடனடியாக கடல் அரிப்பைத் தடுப்பதற்கான கற் தடைகளை ஏற்படுத்துவதற்காக வேலைத்திட்டத்தை உடனடியாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் இந்நிகழ்வில் கரையோரப் பாதுகாப்பு திணைக்களப் பொறியியலாளர் துளசிதாசன் மற்றும் கரையோரப் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டதோடு மீனவர்களும் கலந்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினருடன் பல்வேறு கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.











காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். மண் எமக்களித்த சிவஞானச் சித்தர் யோகர் சுவாமிகள்



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண்- ஆஸ்திரேலியா

சித் என்றால் அறிவு , ஞானம் , தெள்ளிய பார்வை ,கூர் நோக்கு, விரிந்த நோக்கு என்று பொருள் சொல லப்படுவதால் – சித்தர்களை அறிவாளிகள் , ஞானிகள், தெளிந்த பார்வையினை உடையவர்கள் , கூர்ந்த நோக்கினை உடையவர்கள்,கடந்து சிந்திப்பவர்கள் என்றும் எடுத்துக் கொள்ளலாம் அல்லவா !

சித்தர்கள் என்பவர்கள் மானிடம் செழித்திட வாழ்ந்த மகா ஞானிகள் எனலாம். ' அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு ' என்னும் தத்துவமே அவர்களது இறுக்கமான தத்துவமாய் இலங்கியது எனலாம். எதை யும் விரும்பார். எதையும் தமக்காக்கிட எண்ணார். மற்றவர் நலனுக்காய் அவர்கள் எப்பொழுதும் கை கொடுத்திடவே எண்ணுவார்கள். அதன் வழியில் பயணப்படுவார்கள்.

' மக்கள் சேவையினை மகேசன் சேவையாய் ' எண்ணி இப்பூவுலகில் வாழ்ந்தவர் – பல சித்தர்கள் இருக் கிறார்கள், அப்படியான சித்தருக்கென்று ஒரு பரம்பரையே இருக்கிறது என்பதை வரலாற்றால் அறிகி றோம்.

பாரத நாட்டில் திருமூலருடன் சித்தர் பரம்பரையினை இணைத்துக் கூறுவது வழக்கம். திருமூலர் மூவா யிரம் வருடங்கள் இம்மண்ணு லகில் வாழ்ந்து பல அரிய , பெரிய, பணிகளையெல்லாம் ஆற்றினார் என்று அறிகிறோம். அவரின் பேராற்றல் வியந்து பார்க்கக் கூடியதாகும். அவரின் திருமந்திரம் என்னும் திவ்விய நூல் பலவித கருத்துக்களின் பொக்கிஷமாய் மிளிர்கிறது எனலாம். திருமூலரைத் தொடர்ந்து பல சித்தர் கள் பாரத மண்ணில் வந்தார்கள். அவர்களில் சிலர் ஈழத்திலும் கால்பதித்து சமூக நலனுக்காய் பலவற் றைச் செய்தார்கள் என்றும் அறிய முடிகிறது.

ஈழத்துச் சித்தர்கள் என்றும் சொல்லும் பொழுது மற்றய சித்தர்களை விட மாறு பட்டவராய் , வேறு பட் டவராய் ஒருவர் யாழ்ப்பாண மண்ணிலே பிறந்து, எல்லா இடமும் திரிந்து,யாவருக்கும்சுமைதாங்கியாய், ஆன்மீக வெளிச்சமாய் விளங்கியிருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுவது சாலவும் பொருந் தும் என எண்ணுகின்றேன். ஆடையில் ஆடம்பரம் இல்லை. தனிப்பட்ட எந்த அலங்காரங்களும் இல்லை. எளிமையான் வாழ்வு. பரிவாரங்கள் இல்லை.பவனி இல்லை. யாரும் சந்திக்கலாம். ஏற்றத்தாழ்வுகள் பார் ப்பதும் இல்லை. நாடியவர்களின் நலன் காக்கும் நன்மருந்து.


நல்லூரில் தேரடியில் ஞானம் பெற்று , கொழும்புத் துறையில் குடிசையில் அமர்ந்து அருளாட்சி புரிந்து இறையடியைச் சரண் புகுந்த யோகர் சுவாமிகள்தான் அப்பெரும் சித்தராவார்.

மாவிட்டபுரத்தில் சைவக்குடும்பத்தில் பிறந்து ' சதாசிவன் ' என்னும் பெயர் பெற்று , கத்தோலிக்க பள்ளி யில் ' யோன் ' என்று பெயர் மாற்றப்பட்டு நிறைவில் யோகநாதனாகிப் பின் ' யோகர் சுவாமி ' என்னும் சித்தராய் மலர்கிறார் இந்த மகான். தாயார் சிறுவயதில் இறக்கிறார். தந்தையார் மலை நாட்டில் வேலை செய்கிறார். மகனை எப்படியாவது படிக்க வைக்கத் தந்தை விரும்புகிறார்.

தந்தையின் உடன் பிறந்த சகோதரன் சின்னையாவோ கொழும்புத் துறையில் கத்தோலிக்கப் பெண்ணை மணம் முடித்து அம்மதத்துள் நிற்கின்றார். அந்தச் சூழலில் சதாசிவன் – யோனாகி கல்வி கற்கும் சூழ் நிலை ஏபட்டதைக் கண்டதும் ; தந்தையுடன் பிறந்த சகோதரி முத்துப்பிள்ளை என்பவர் மருமகனை மீட்டு சைவத்துள் கொண்டுவர முயலுகின்றார். சமணத்துக்குச் சென்ற தம்பியை மீட்ட திலவதியார் போல – மரு மகனைச் சைவத்துக்குள் இழுத்திட மாமியார் முன்வந்து நின்றார் எனலாம். மருமகனை மாற்று மதம் தீண்டா வண்ணம் சைவப் பற்றினை ஊட்டுவதற்காக மாமியார் முத்துப்பிள்ளை கையாண்ட வழிகள் நல்ல வெளிச்சமாய் அமைந்தது எனலாம். மாமியாயின் நெறிப்படுத்தலினால் – யாழ் மண்ணுக்கு நல்ல தொரு சித்தர் கிடைக்கப் பெற்றார் என்பதும் பொருந்தும் அல்லவா !

கந்தப்பெருமான் அருள்புரியும் மாவிட்டபுரத்தில் பிறந்தவர் கந்தப் பெருமான் அருள் புரியும் நல்லூரில் ஞானம் பெற்றார் என்பது திருவ ருள் அல்லால் வேறு எப்படி என்று எடுக்க முடியும் !

எல்லோரையும் போலவே சாதரணமாகவே பிறந்தார். சாதாரண மாகவே வளர்ந்தார். சாதாரணமாகவே படித்தார். அதன் பின் அரச உத்தியோகமும் பார்த்தார். அவரின் பிறப்பில்கூட எந்த அதிசயமும் நிகழவி ல்லை என்பதும் நோக்கத்தக்கத்தது. ஆனால் பெரும் மகானாக , பெரும் சித்தராக அவர் வளர்ந்து நின்றார் என்பதற்கு இறையருளை த்தான் காரணம் எனச் சொல்லக் கூடியதாக இருக்கிறது .



**'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை**
**பற்றுக பற்று விடற்கு '**

என்ற வள்ளுவத்தின் கருவே யாழ் மண்ணின் சித்தரிடம் நிறைந்து காணப்பட்டது எனலாம

' மற்றவர்கள் துயிலும் பொழுது ஞானி விழித்திருப்பான் ' என்று கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது. அது முற்றிலும் எங்கள் யாழ் மண்ணின் ஆன்மீக ஜோதி யோகர் சுவாமிகளுக்கு மிகவும் பொருத்தமாய் அமை ந்தது எனலாம்.கிளிநொச்சியில் சுவாமிகள் நீர்ப்பாசனப் பகுதியில் கடமையாற்றும் வேளை –வேலை முடி ந்து மற்றவர்கள் நித்திரைக்குச் சென்றுவிடுவர்.சுவாமியோ அவ்வேளை நித்திரையை விட்டு விட்டு நெடு நேரம் ' தியானத்தில் ' இருந்திருக் கிறார் என்பதை அறிய முடிகிறது. சுவாமிகள் இப்படி இரவில் நடந்து கொள்ளுவதை – அங்கு சென்று வரும் அவரின் மாமியாரின் மகனாகிய வயித்தியலிங்கம் என்பார் சுவா மிகளுக்கு ' விசர்போக்கு ' ஆரம்பித்து விட்டது என்று கூறியதாகவும் அறிய முடிகின்றது.கிளிநொச்சியில் இருந்த காலத்தில் – தேவாரம் , திருவாசகம் , திருமந்திரம், அருணகிரியார் பாடல்கள், தாயுமானவர் பாடல் கள், சித்தர் பாடல்கள், ஔயார் பாடல்கள், ஆகியவற்றை மனனம் செய்திருக்கிறார் என்றும் அறிய வரு கிறது.

சுவாமிகளின் வாழ்கையில் அவரது இருபத்தைந்தாவது வயது குறிப்பிடத் தக்க காலம் எனலாம். அவர் வேலையை விட்டு யாழ்மண்ணுக்கு வருகிறார்.இலங்கைவந்த வீரத்துறவி சுவாமி விவேகானந்தரைக் காணும் பேறும் அவருக்கு வாய்க்கின்றது. சுவாமி விவேகானந்தருக்கு யாழ்மண்ணில் கொடுக்கப்பட்ட வரவேற்பு நிகழ்வில் பங்குபற்றும் வாய்ப்பும் கிடைக்கிறது.

இராமகிருஷ்ணபரமஹம்சரிடத்தும்,விவேகானந்தரிடத்தும் , இராமகிருஷ்ண அமைப்பிலும் சுவாமிக ளுக்கு மிகுந்த நம்பிக்கையும் ஈடுபடும் இருந்தது எனலாம். மயில்வாகனம் என்னும் மட்டுநகர் பெருமகன் இராமகிருஷ்ண அமைப்பில் இணைய விழைந்த வேளை அவரை ஆசீர்வதித்து வரவேற்று நின்றவர் யோகர் சுவாமிகளாவர். அந்த மயில்வாகனே பிற்காலத்தில் முத்தமிழ் வித்தகராய் முகிழ்த்த 'சுவாமி பிபுலானந்த ' அடிகள் ஆவர்.

**'எப்பவோ முடிந்த காரியம் '**
**'முழுவதும் உண்மை '**
**'நாமறியோம் '**
**'முழுவதும் உண்மை '**

இவையாவும் உபநிடத வாக்கியங்களின் மொழி பெயர்ப்புப்போல் தென்படுகிறதல்லவா ? ஆம் .... யாழ் மண்ணில்வந்துநின்றமகாசித்தரானசெல்லப்பாசுவாமிகளின் உள்ளத்தினின்றும் வெளிவந்த வாக் கியங்களே இம் மகா வாக்கியங்களாகும். இவற்றை உபநிடதம் அல்லால் வேறு என்ன வென்று சொல்ல முடியும் !

நல்லூர் தெரிவில் சிரித்தபடி திரிந்தார்.வெறித்த பார்வையராய் இருந்தார்.

வேடம் எதையுமே விரும்பினர் அல்லர். கறுப்பு நிற மேனியும் , கந்தையுமே

அவரடையாளம். அவரைப் பித்தன் என்று மற்றவர்கள் பேசித்திரிவார்கள்.

அவரை நாடி வந்தால் வந்தவரைப்பார்த்துச் சீறுவார். வீதியால்செல்லுபவர்களைப்பேசுவார். புகழ்சியே இகழ்ச்சியோ எல்லாவற்றையும் ஒன்றாகவே எடுத்துக்கொள்ளுவார். திருநீறு அணிய மாட்டார். நெற்றியில் பொட்டும் இருக்காது. முதல் கூறியதைத் திரும்பக் கூறாதவர். சாதியை , சமயத்தைப் பேசி சங்கடத்துக்குள் அகப்படாதவர். இப்படியெல்லாம் இருந்தவர்தான்

நல்லூர் தேரடியில் இருந்த பெரு ஞானி , சித்தர் , செல்லப்பராவர்.

அந்த ஞானியை யோகர் சுவாமிகள் 1904 ஆம் ஆண்டில் நல்லூர் தேரடியில் காணுகிறார். ' டேய் நீ யார் ' என ஒரு உலுக்கு உலுக்கி ' ஒரு பொல்லாப்பும் இல்லை ' என்று உறுமினார். ' தேரடாவுள் ' , ' தீரடா பற்று ' , என்னும் உபதேசங்கள் அங்கு அவருக்குக் கிடைத்தன. செல்லப்பரின் உறுமல் யோகர் சுவாமிகளைக் கட்டிப் போட்டது.

ஞான தேசிகனைச் சந்தித்ததும் அதனால் தன்னுள் ஏற்பட்ட பரிபூரண நிலையையும் சுவாமிகள் பாட்டாகவே காட்டியுள்ளார்.

**'இருவருந் தேடிக் காணா இறைவன் என்போல்**
**உருத்தாங்கி**
**இணங்கி யெவரும் வணங்கும் நல்லையில்**
**இன்னான் இவனென்ன**
**ஒருவரு மறியா தோடியுலாவி உவகை பூத்த**
**முகத்தினராய்**
**ஒருநாள் என்றனை உற்று நோக்கி ஓர்**
**பொல்லாப்பு மில்லையென்று**
**அருவமுங் காட்டி உருவமுங் காட்டி அப்பாற்**
**கப்பாலாம்**
**அருள்நிலை காட்டிக் காட்டிக் காட்டிக் அந்த**
**மாதி யில்லாச்**
**சொரூபமும் காட்டிச் சும்மா விருக்கும்**
**சூட்சுமத்தில் மாட்டிவிட்டான்**
**துன்பம் இறந்தன இன்பம் இறந்தன**
**சோதிசோதி சிவசோதி '**

உபதேசம் கிடைத்தும் சுவாமிகள் குருவை விட்டகலாதே இருந்தார். ஆனால் குருவோ அவருக்குச் சோதனைமேல் சோதனைகள் கொடுத்தார்.தேறினார் யோகர் சுவாமிகள். ஆனால் செல்லப்பரோ ஏறியே விழுந்தார். இறுதியில்' இரு யானைகள் ஒரு தறியில் கட்டப்படாது ' என்று செல்லப்பர் கூறி சுவாமிகளைக் கலைத்துவிட்டார்.

**'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை**
**பற்றுக பற்று விடற்கு '**

இக்குறள் வழியில் யோகர் சுவாமிகள் இருந்தார். அதனால் குருவின் ஏச்சோ , பேச்சோ அவரை மாற்றிவிடக் கூடியதாக அமையவில்லை. எல்லாமே தனக்கு வாய்த்த உபதேசம் என்று சுவானிகள் எடுத்துக்கொண்டார்.

குருநாதர் செல்லப்பர் உடல்நலம் இல்லாது படுத்திருந்த வேளை சுவாமிகள் அவரைப் பார்க்கச் சென்றாராம். ' என்ன பார்க்கப் போகிறாய் ? நில் அங்கே, உன்னைச் சிந்தித்துப் பார் ' . என்றாராம் செல்லப்பர். அவ்வார்த்தையுடன் திரும்பிய சுவாமிகள் அந்தப்பக்கமே போகவில்லை என்று அறிய முடிகிறது.

யோகர் சுவாமிகள் கொழும்புத்துறையில் ஒரு சிறு கொட்டிலில் தனது வாழ்வினை ஆரம்பிக்கிறார். அங்கு ஆன்மீக ஒளி அனைவருக்கும் கிடைக் கிறது.சாதி , சமய , இன , மொழி , வேறுபாடுகளைக் கடந்து பலருமே அவரை வந்து வணங்குகிறார்கள். ஆசிகளை , வாழ்த்துகளைப் பெற்று திருப்தி அடை கிறார்கள்.

யோகர் சுவாமிகளை நாம் இன்றும் நினைத்து அவருக்குக் குருபூசை வழிபாடுகள் செய்வதற்குக் காரணம் அவரின் வாழ்வியல் முறைகளே எனலாம்.

அவரின் பூரணமான துறவு நிலை அவரை பெரும் ஞானியாய் சித்தராய் மிளிர வைத்திருக்கிறது எனலாம். பலரும் சமூகத்தில் துறவு நிலையினை மேற் கொண்டு பிரமச்சாரிகளாய் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களின் வாழ்வியலையும் யோகர் சுவாமிகளின் வாழ்வியலையும் ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்த மானதன்று. அவர்களின் நிலை வேறு. சுவாமிகளின் நிலை வேறு.

'தமக்கென வாழா பிறர்க்குரியவராய்' சுவாமிகள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்.தனக்கு நாளை க்குத் தேவை என்று கருதி எதையும் அவர் வைத்திருக்க எண்ணுவதே இல்லை. அன்பர்கள் கொடுப்பதில் ஒரு சிறுபகுதியை பயன்படுத்துவார். மற்றவற்றை எல்லாம் பங்கிட்டு அளித்து விடுவார். பணம்கூட அவ ருக்கு ஒரு பொருட்டல்ல. தேவையான பொழுது அவருக்குக் கிடைக்கும். தேவைக்கு அதிகமாக பொன் னோ, பொருளோ எதையும் சுவாமிகள் மனம் நாடுவதே இல்லை.

'பற்று இல்லாதவனிடத்து எல்லாப் பொருள்களும்

# யாழ். மண் எமக்களித்த...

11ம் பக்கத் தொடர்ச்சி...........


வந்து சேரும் ' என்பதற்கு சுவாமிகள் அவர்கள் நல்ல தோர் எடுத்துக்காட்டு எனலாம். இன்று சித்தர்கள் , ஞானிகள், ஆன்மீக வழிகாட்டிகள் என்று நாட்டில் தலைவிரித்து நிற்கும் பலர் பொருள் ஒன்றே குறிக்கோளாய் மனமிருத்தி மக்களை ஏமாற்றி ஆன்மீகத் தையே இழிவு படுத்திக் கேவலத்துக்கு ஆளாகிநிற்பதை இன்றுயதார்தமாகவேகாணமுடிகிறதல்லவா? ஆனால் யோகர் சுவாமிகளோ

'பற்றினைப் பற்றா நின்றவர்' . பரமனைப் பற்றினார் . பண்புகளைப் பற்றினார். சமூக நலன்களைப் பற்றினார். ஆன்மீகத்தைப் பற்றினார். அக ஒழுக்கத்தைப் பற்றினார். அன்பைப் பற்றினார். ஆறுதலைப் பற்றினார்.

பலவித கொள்கையினை உடைவர்கள் , அரசியலில் உயர் நிலையில் இருப்பவர்கள், அரச உயர்பத விகளில் இருப்பவர்கள் என்று பலவகைப் பட்டவர்கள் சுவாமிகளை நாடி வருவர். வருபவர்களின் நம்பிக்கைக்கு ஊறு விளைவிக்கும் வண்ணம்நடந்திடசுவாமிகள்விரும்பியதேஇல்லையாம்.இப்படி சுவாமிகள் நடப்பதால் வருபவர்கள் மனதில் – தங்களின் கொள்கையினை உடையவர்தான் சுவாமிகள் – என்னும் எண்ணம் உருவாகி விடுகிறது எனலாம்.

'பார்க்கும் இடமெங்கும் நீக்கமறப் பரம் பொருளையே' சுவாமிகள்காண்பதனால்அவருக்குவருபவர்கள்வேறுபாடுகள் தென்படுவதில்லை எனலாம்.' ஒவ்வொருவரும் தத்தம் கடமையைச் செய்ய வேண்டும் ' என்பதை வருபவர்களுக்கு சுவாமிகள் பெரும் உபதே சமாக வழங்குவார்.பஞ்சமா பாதகங்களை ஒருவன் ஒழித்தாலே வாழ்வு சிறக்கும் என்பது சுவாமிகளின் பெரு நம்பிக்கையாய் அமைந்தது. துறவு பூண்டுதான் உண்மையினை உணர வேண்டும் என்பதில்லை. இல்லறத்தே இருந்தாலும் நல்லறமாய் வாழ்க்கை யினை அமைத்துக் கொண்டால் உண்மையினை உணரலாம் என்பது சுவாமிகளின் நல்ல தொரு தத்துவமாயும் வாழ்வியலுக்கு ஏற்ற வழிகாட்டியாயும் அமைந்தது எனலாம்.

உலகத்தைத் திருத்த முயலுதல் என்பது நாய் வாலை நிமிர்த்த முயல்வது போலாகும்.உன்னை முதலில் திருத்த முயற்சி செய்.உலகத்துக்கு நன்மை செய்ய முற்பட்டால் நாமே அதிக நன்மையை அடைகிறோம் என்பதை நாம் அனைவருமே உணருதல் வேண்டும் என்னும் அரிய தத்துவத்தை சுவாமிகள் மொழிந்தி டுவார். இது யோகர் சுவாமிகளின் சமுதாய அக்கறையினைப் பறைசாற்றி நிற்கிறதல்லவா ? முற்றும் துறந்த பற்றற்ற சித்தரான யோகர்



சுவாமிகளின் இச் சிந்தனையாலேதான் இன்றும் நாம் அவரை நினை க்கவும் பூசிக்கவுமான நிலை ஏற்படுகிறது எனலாம். துறவி என்றால் காட்டுக்குப் போய் கடுந்தவம் ஆற் றுவதல்ல. நாட்டுக்குள் , நாட்டு மக்களுக்கு மத்தியில் வாழ்ந்து நாட்டுமக்களின் நல் வாழ்வுக்கு வெளிச் சமாய் இருப்பதுதான் சரியான துறவியின் இலட்சணம் , இலக்கு என்பதைக் காட்டியவர் யோகர் சுவாமிகள் என்பதை எவருமே மறுத்துரைத்துவிட முடியாது ! அதனால்த்தான் அவரை நாடு கடந்தும் மொழி கடந்தும் இனங்கடந்து பின்பற்றிப் பல சீடர் பரம்பரையும் , நல்ல வழிகாட்டுதல்களும் மலர்ந்திருக்கின்றன என்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

யோகர் சுவாமிகளின் நெறிப்படுத்தலால் பல இளைஞர்கள் வாழ்விலே திருந்தி இருக்கிறார்கள். பொது மக்களுக்கான சேவைகளை இன்றும் யாழ்மண்ணில் செய்து கொண்டு பல உள்ளங்கள் இருக்கின்றன என்றால் அதற்கெல்லாம் வித்தாகி உரமாகி நிற்பவர் யோகர் சுவாமிகளே ஆவர். ஆண்டவன் இல்லை என்று அடித்துக் கூறியவர்கள் பலர் சுவாமிகளின் அறிவுரைகளால் ஆன்மீககத்தில் நாட்டங் கொண்டு ஆண்டவன் புகழ் பாடும் நிலையில் வந்து நின்றார்கள் என்பதும் அறியக்கூடிய ஆனந்தமான அவசியமான தகவல் எனலாம்.

திருவாசகத்தை பெரிதும் சுவாமிகள் விரும்பினார். திருவாசகத்துள்ளும் சிவபுராணத்தை அவர் முக்கிய த்துவப் படுத்தினார். ஈழத்தில் சிவபுராணம் பள்ளிகள் தோறும் வெள்ளிக் கிழமைகளில் பிராத்தனை மண் டபத்தில் படிக்கப்படுவதற்கும் யோகர் சுவாமிகளின் வழிகாட்டலே துணையாய் அமைந்திருக்கும் என்றும் எண்ணத் தோன்றுகிறது.சிவதொண்டன் நிலையம் சுவாமிகளை நினைவூட்டிக் கொண்டே இருக்கும். இரா கமாகப் பாடி திருமுறைகளை ஓதுவதில் சுவாமிகள் பெரு விருப்புடையவராக இருந்தார் எனலாம். அவ ரின் திருவாக்காய் மலர்ந்திருக்கும் ' நற்சிந்தனைகள் ' மிகப் பெரிய தத்துவக் கருத்துகளை உள்ளடக்கிய எமக்கு வாய்த பொக்கிஷம் என்றே சொல்லலாம்.

சித்தர் என்றால் , யோகி என்றால் , ஞானி என்றால் , சாத்திரம் சொல்லுவார். தொட்டவுடன் நோய்களைப் போக்குவார். கேட்டவற்றை உடனே கண்முன்னே வரவழைத்துக் கொடுப்பார். உருவை மாற்றுவார். சித்து க்கள் காட்டுவார். என்றெல்லாம் நாம் அனைவரும் எண்ணியே நிற்கின்றோம். இப்படியெல்லாம் செய்யும் நிலைக்கும் ஞானத்துக்கும் எந்தவித தொடர்புமே இல்லை என்பதுதான் உண்மை நிலையாகும். இதை நம்மில் பலர் அறியவில்லை எனலாம்.

யாழ்மண்ணின் யோக புருஷரான யோக சுவாமிகள் மானிடம் தளைக்க நல்ல ஆன்மீக ஒளி பாய்ச்சிட வந்த மகானாகவே விளங்கினார். அவரிடமும் எதிர்காலத்தை அறியும் ஆற்றலும் , வருகின்ற அல்லல் களை அறியும் ஆற்றலும், நிரம்பியே இருந்தது. ஆனால் அவர் அவற்றை மக்கள் மத்தியில் காட்டி செல் வாக்கினைப் பெற்றிட ஒரு நாளுமே எண்ணம் கொண்டவராக இருந்ததே இல்லை. தனது மனதுக்குப் பட்டால் சிலவேளை சிலருக்கு வழி காட்டியிருக்கிறார் என்பதை அவரின் வரலாற்றால் அறிந்து கொள்ள முடிகிறது. 'பெரியோர்களை நாடுவதன் தலையாய நோக்கம் நம்மைச் சீர்படுத்துவதற்கே அன்றி வேண் டியதைப் பெறுவதற்கு அல்ல ' என்னும் கருவினைத் தமது உள்ளத்தில் கொண்டு செயற்பட்ட படியால்த் தான் இன்றும் நாம் யோகர் சுவாமிகளை நினைத்து அவரைப் போற்றுகிறோம் எனலாம்.

**(இன்று யோகர் சுவாமிகள் நினைவு தினம்)**


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# உகந்தைமலை முருகன் ஆலய புனித பூமியில் கடற்படையால் அமைக்கப்பட்ட புத்தர் சிலை

## தொடரும் சர்ச்சைகள்

(பாறுக் ஷிஹான்)

தொன்மை வரலாறு கொண்ட உகந்தை முருகன் ஆலயம் கடந்த சில நாள்களாக இலங்கையிலும் சர்வதேச அளவிலும் பேசு பொருளாக மாறி வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் லாகுகல பிரதேச செயலாளர் பிரிவு தென் எல்லையில் அமைந்துள்ள தமிழர்களுடைய தொன்மையும் புராதனமும் வரலாறும் கொண்ட உகந்தை முருகன் ஆலய புனித பிரதேச பகுதியில் காணப்படும் ஒரு மலையில் திடீரென அப்பகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படையினரால் ஸ்தாபிக்கப்பட்ட புத்தர் சிலை தொடர்பான விவகாரம் தொடர்பில் பல்வேறு எதிர்மறையான கருத்துக்கள் தகவல்கள் ஊடகங்கள் வாயிலாக வெளியாகியுள்ளன.

இந்த விடயத்தை ஆராயும் விதமாக எமது ஊடகவியலாளர் உட்பட சக செயற்பாட்டாளர்கள் குழு அப்பகுதிக்கு சென்று குறித்த புத்த சிலை நிர்மாணம் குறித்து ஆராய்ந்துள்ளது. இதற்கமைய ஆலயத்தில் காணப்பட்டவர்களிடம் பேசுகின்ற போது இந்த புத்தர் சிலை நிறுவுகின்ற விடயம் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று 2023 இல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்றும் 2024 இல் ஒரு புத்தர் சிலை இங்கே நிறுவப்பட்டது என்றும் கூறப்பட்டது.

அத்தோடு கடந்த இரண்டு மாதங்களாக இந்த புத்தர் சிலை பெரிய அளவிலே இங்கே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் நேரடியாக அங்கு அந்த இடத்திற்கு சென்ற நாம் அவதானித்தது அந்த இடத்தில் முருகன் ஆலயத்திற்கு முன்பாக கடற்கரை பிரதேசத்தில் வலது புறம் வள்ளியம்மன் மலை தோணிமலை போன்றவைகளும் இடது புறம் கடற்படை முகாமோடு இணைந்ததாகக் காணப்படுகின்ற ஒரு மலையும் அந்த மலையில் தான் இந்த புத்தர் சிலையும் நிறுவப்பட்டு இருக்கிறது.

இது உகந்தை ஆலய பிரதேசம் இந்த உகந்தை ஆலய பிரதேசம் என்பது சைவத் தமிழர்களுடைய பூர்வீகமான ஒரு வரலாற்றிடம் இங்கு எவ்வாறு இந்த புத்தர் சிலை நிறுவப்பட்டது. யாரால் நிறுவப்பட்டது? ஏன் நிறுவப்பப்பட்டது? இதனுடைய பின்னணி என்ன? என்பதை பற்றி எல்லாம் ஆராயப்பட வேண்டும்.

இந்நிலையில் நாங்கள் அவதானித்த போது இந்த புத்தர் சிலை கடற்படை முகாமில் இருந்து வந்த சிவில் உடை தரித்த இருவரால் அந்த சிலையுள்ள மலை துப்பரவு செய்யப்பட்டதையும் காண முடிந்தது.

இந்த சிலை அவர்களுக்கு தெரியாமல் அங்கு வேறு யாரும் நிறுவியிருக்க முடியாது இது அவர்களுடைய கடற்படை முகாமுடன் காணப்படும் மலை பிரதேசம் என்பதையும் நாங்கள் அறிந்து கொண்டதோடு இது அவர்கள் வழிபடுவதற்காக நிறுவியிருக்கலாம் என்றொரு கருத்தும் அங்கு கூறப்பட்டது அவ்வாறு கடற்படையினர் வணங்குவதாக இருந்தால் அதை அவர்களது முகாமினுள் வைத்திருக்கலாமே ஏன் அதை பொது வெளியில் அதுவும் உகந்தை முருகன் திருவம்பாவை காலத்தில் தீர்த்தமாடுகின்ற அந்த பிரதேசத்தில் நிறுவினார்கள் எனும் கேள்வியும் எழுகிறது.



மேலும் உகந்தை முருகன் திருவெம்பாவை காலத்தில் தீர்த்தம் ஆடுகின்ற அந்த பிரதேசத்தில் இதற்கு முன்னர் ஒரு சூலம் நிறுவப்பட்டிருந்தது என்றும் இப்போது அந்த சூலம் அகற்றப்பட்டிருக்கிறது என்றும் அது யாரால் ஏன் அகற்றப்பட்டது எனும் கேள்வியும் எழுகிறது.

இன்றையதினம் ஆலயத்திற்கு புலனாய்வுத்துறையினரும் வந்து தங்களிடம் இதை யார் புகைப்படம் எடுத்தது யார் ஊடகங்களில் வெளியிட்டது என்று கேட்டிருந்தார்கள் என்றும் இந்த இடத்திற்கு பாதுகாப்பு வழங்குவதற்காக அவர்கள் வருகை தந்து நின்றார்கள் என்று இரு பொலீஷாரும் வந்திருந்தார்கள் எனவும் கூறப்பட்டது .அந்த பொலீஸாரையும் அப்பகுதியில் காண முடிந்தது.

மேலும் அந்த இடத்தில் ஓர் அச்சமான பதட்டமான சூழலையும் நாங்கள் அவதானித்தோம். அதை தொடர்ந்து இந்த விடயங்களை ஆராய்ந்து தகவல்களை சேகரித்த பின்னர் நாங்கள் அங்கிருந்து வெளியாகியிருந்தோம் என எமது செய்தியாளர் தெரிவித்தார்.

மேலும் எங்களிடம் இருக்கின்ற கேள்வி உகந்தைமுருகன் ஆயத்தின்மலையில்வள்ளியம்மன்ஆலயத்தைஅண்டியதாக அமைக்கப்படவிருந்த முருகன் சிலையினை அமைக்க வேண்டாம் என்று தடுத்து நிறுத்திய வனத் திணைக்களத் மற்றும் ஏனைய திணைக்ககளங்கள் ஏன் இந்த புத்தர் சிலையினை நிறுத்தவில்லை என்ற கேள்வியும் எழுகிறது.

எனவே இதன் பின்னணி என்ன என்பதையும் இது தொடர்பான உண்மைகளையும் உரிய திணைக்களங்கள் உடனடியாக விசாரித்து உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதோடு, இந்த சிலை நிறுவிய விடயம் சைவத் தமிழர்களிடையே அதிர்ச்சியையும் தங்களுடைய உரிமை மறுக்கப்பட்டு இன்னும் ஒரு சமூகத்திற்கு உரிமை வழங்கப்பட்டிருக்கின்ற விடயத்தையும் பேசுபொருளாக்க்கி இருக்கிறது. எனவே இந்த அரசு உடனடியாக இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்,

இந்த சிலையை அப்புறப்படுத்த வேண்டும் என்றும் எங்களுடைய கோரிக்கையை முன் வைக்கின்றோம்.இந்த சிலை பற்றிய விடயத்தை நாங்கள் பேசுகிறபோது சன்னியாசி மலையும் எங்களிடம் இருந்து பறிபோயிருக்கிறது. அங்கும் ஒரு புத்தர் சிலை நிறுவப்பட்டிருக்கிறது என அம்பாறை மாவட்ட மனித உரிமை செயற்பாட்டாளர் தாமோதரம் பிரதீவன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.



# பாரம்பரிய முறைப்படி வண்ணக்கர் தலைமையில் உகந்தமலை முருகன் ஆலய நிர்வாகம் செயற்படும்

## வழக்கின் தீர்மானம் பற்றி சிரேஸ்ட சட்டத்தரணி சிவரஞ்சித்

(வி.ரி.சகாதேவராஜா)

கடந்த மூன்று வருட காலமாக லாகுகலை பிரதேச செயலகத்தின் கீழ் பரிபாலிக்கப்பட்டு வந்த வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலய நிர்வாகம், இனிமேல் பாரம்பரிய முறைப்படி வண்ணக்கர் தலைமையில் செயற்படும் .

இவ்வாறு கிழக்கின் பிரபல சிரேஸ்ட சட்டத்தரணி நடராஜா சிவரஞ்சித் தெரிவித்தார்.

உகந்தமலை முருகன் ஆலயம் தொடர்பாக பொத்துவில் மாவட்ட நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் நடைமுறையில் உள்ளன .

அவற்றில் ஒரு வழக்கு கடந்த வாரம் பொத்துவில் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற போது ஓர் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்மானம் நீதிபதியால் கட்டளையிடப் பட்டிருக்கிறது.

அந்த வழக்குகளில் ஆலயம் சார்பில் சட்டத்தரணி நடராஜா சிவரஞ்சித் ஆஜராகி வருகிறார்.

நீதிமன்ற தீர்மானம் தொடர்பாக சட்டத்தரணி நடராஜா சிவரஞ்சித் கூறுகையில் -

உகந்தமலை முருகன் ஆலயம் தொடர்பாகமூன்றுவழக்குகள்பொத்துவில் மாவட்ட நீதிமன்றத்தில் சமகாலத்தில் சென்று கொண்டிருக்கின்றன. அதுக்கு நான் ஆஜராகி வருகின்றேன் .

ஆலய நிர்வாக செயற்பாடுகள் மீண்டும் வண்ணக்கர் தலைமையில் கொண்டு வர வேண்டும் என்ற ரீதியிலே தொடரப்பட்ட வழக்கு கடந்த வாரம் நீதிமன்றிலே எடுத்து கொள்ளப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் ஏற்ற நீதிபதி இரு சாராரும் இணக்கப்பாட்டிற்கு வந்தமையால் பொதுவான தீர்மானத்தை வழங்கியிருந்தார். இரு சாராரினதும் இணக்கப்பாட்டினால் ஆலய நிர்வாகம் இனிமேல் பாரம்பரிய முறைப்படி வண்ணக்கர் தலைமையில் இயங்கும் என்றும் நிதி செயல்பாடுகள் பிரதேச செயலாளர் கண்காணிப்பில் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார் .

அதன்படி ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க சுதா இனிமேல் பாரம்பரிய சம்பிரதாயங்களை கடைப்பிடித்து ஆலயத்தை வழிநடத்த உள்ளார்.

புதிய நிர்வாகம் மிக விரைவில் தெரிவு செய்யப்படும் என்று தெரிகிறது.

# முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் முஸ்லிம் காங்கிரஸுக்கு நன்றி தெரிவிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)



வடக்கு மாகாண காணி சுவீகரிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வாபஸ் பெற வைப்பதற்காக தமிழ் தரப்புடன் இணைந்து காத்திரமான பங்களிப்பைச் செய்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி மற்றும் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் எம்.பி ஆகியோருக்கு விஷேட நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்ற விவாதங்களிலும் பிரதமர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலும்இவர்கள்துணிச்சலுடன் ஆணித்தரமாகவும்ஆக்கபூர்வமாகவும் கருத்துகளை முன்வைத்து, அழுத்தம் வழங்கியிருந்தனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் செயலாளர் நாயகம் நிசாம் காரியப்பர் ஆகியோர் குறித்த வர்த்தமானியை இரத்துச் செய்யும் விவகாரத்தில் வழங்கிய காத்திரமான பங்களிப்பை பாராட்டி தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் இருவருக்கும் விஷேட நன்றிகளை தெரிவித்துள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.05.2025இல் வெளியிடப்பெற்றது